08 APR 1998


# காலைக்கதிர்

பக்கங்கள் 12

KAALAIKATHIR வாரவெளியீடு


மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
கிடைக்கப்பெற்றது
08 APR 1998
12
உரிய நடவடிக்கைக்காக
ஆணையாளர்

விலை ரூபா: 8/-

ஒளி 01 திருவள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 20 ஏப்ரல் 03 — 09, 1998 கதிர்: 05

# தமிழர் மீதான கெடுபிடிகள் கொழும்பு நகரில் அதிகரிப்பு

கொழும்பின் பல பகுதிகளிலும் படையினர் மேற்கொண்ட பல்வேறு சுற்றி வளைப்பு தேடுதல்களின் போது சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டு உள்ளனர். கடந்த இரு வாரங்களாக கொழும்பில் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில அநேகமானோர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட போதும் பெருமளவானோர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு முன் திரண்டு நிற்பதால் போக்குவரத்து நெருக்கடிகள் கூட ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பில் கடந்த 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று அதிகாலையில் பதினைந்துக்கும் மேற்பட்ட விடுதிகள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன. இதில் சுமார் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமானவர்கள் விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். செட்டியார் தெரு, கொட்டாஞ்சேனை கதிரேசன் வீதி, டாம் வீதி ஆகிய இடங்களிலிருந்த விடுதிகளே இவ்வாறு அதிகாலையில் சுற்றி வளைக்கப்பட்டவையாகும். அதேவேளைபம்பலப்பிட்டி பகுதியில் சுமார் இருநூறு பேரும், முகத்துவாரம் பகுதியில் சுமார் நூற்றியம்பது பேரும், கைதாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதிகாலை ஒரு மணியளவில் விடுதிகளினுள் புகுந்த படையினரிடம் இம்மக்கள் தமது அடையாளத்தை நிரூபிக்கும் போதியசான்றுகளை சமர்ப்பித்தும் கூட அதை அசட்டை செய்து அவர்களை படையினர் ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் சென்றுள்ளனராம்.

கைதானவர்கள் பொலிஸ் நிலையங்களில் வைத்து நாள்

(12-ம் பக்கம் பார்க்க)

## உயர் பதவியிலுள்ள தமிழரும் சந்தேகிக்கப்படுகின்றார்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் அமைதியைக் குலைக்கும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறுவதனால் கொழும்பில் வாழும் தமிழர்களில் உயர் பதவி வகிப்பவர்கள் கூட சந்தேகக் கண் கொண்டே படையினரால் நோக்கப்படுகின்றனர். அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய மருத்துவத் துறையைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தமிழர்கள் உரிமைக்கான போராட்டம் தீவிரமாகின நிலையில் கூட இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நோக்கப்பட்டு வருகின்றமை படையினர் மத்தியில் மட்டுமன்றி சாதாரண பெரும்பான்மை இன மக்களிடமும் ஏற்பட்டுள்ள சந்தேக மனப்போக்கு எப்போது நீங்கப் போகிறதோ தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ், மற்றும் இராணுவம், கடற்படை போன்றவற்றில் கடமையாற்றும் தமிழர்கள் கூட பாதுகாப்பு உயர் பீடத்தினரால் மிக நுணுக்கமாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

## துர்ப்பாக்கியமான நிலையில் சுதந்திரப் பொன் விழா

—மோஹான் சமரநாயக்க

இன்று நடைபெறும் போரை நிறுத்த முடியாவிட்டால் எதிர்காலத்தில் தெற்கிலும் போர் உருவாகும். நாம் ஒரு இனத்தை அடக்கி ஆள எண்ணக் கூடாது, அன்று தலைவர்கள் விட்ட பிழைகளால் எமது சுதந்திரப் பொன் விழாவை நாம் துர்ப்பாக்கிய நிலையில் சந்திக்க வேண்டியேற்பட்டது. ஐ.நா சபையின் செய்தி தொடர்பு அதிகாரியும் பிரபல வெகுசன தொடர்பாளருமாகிய மோஹான் சமரநாயக்க மேற்கண்டவாறு மேல்மாகாண கருந்தரங்கு ஒன்றில் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திரம் 1815 இல் பறிபோனது. பிற்காலத்தில் பலநாடுகள் புரட்சிகள் மூலம் இரத்தம் சிந்தி

(12-ம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி யாழ்நகரில்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய அமைப்பின் வதிவிட பிரதிநிதி விசிற்றோ ஒலலோ தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.

இவர் பல பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடி வருவதுடன் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அறியப்படுகிறது. (க)

திருகோணமலை உப்பாறுப் பகுதியில்

## வெளியேறிய தமிழ்மக்கள் மீளக் குடியேற அனுமதி மறுப்பு

திருகோணமலை உப்பாறு கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் தம் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாது. அப்படி அவர்கள் ஏரியை கடந்து செல்ல முயன்றால் சுடப்படுவார்கள் என இராணுவ அதிகாரி கேணல் சனத் கருணாரத்ன எச்சரித்துள்ளார்.

திருமலை மாவட்ட செயலகத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மாவட்ட எம்.பி. இரா. சம்பந்தன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கேணல் இவ்வாறு குறிப்பிட்டார்.

உப்பாறு கிராமத்தில் இப்போது பெரியளவில் பயிர்ச்

(12-ம் பக்கம் பார்க்க)

## பிச்சைக்காரரும் கொழும்பில் கைது

கொழும்பு மருதானைப் பகுதியில் நடமாடிய சுமார் இருபது பிச்சைக்காரர்கள் அண்மையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். பிச்சைக்காரர்கள் போல விடுதலைப் புலிகள் நடமாடக்கூடும் என்ற சந்தேகமே இவர்களது கைதுக்கான காரணம் எனத் தெரிய வருகிறது.

## எருக்கலம்பிட்டி கிராமத்தில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலிருந்து கடந்த காலங்களில் வெளியேறிய முஸ்லிம் மக்களில் ஒரு பகுதியினர் தற்போது அங்கு மீளவும் குடியேறியுள்ளனர். புத்தளம மாவட்டத்தின் கற்பிட்டிப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களில ஒரு பகுதியினரே மன்னார் தீவிலுள்ள எருக்கலம்பிட்டியில் மீளக்குடியேறியுள்ளனர்.

மன்னார் நகரப் பகுதியிலிருந்த முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களும் மீளத் திறக்கப்பட்டு வியாபாரம் நடை பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் யாழ்ப்பாணம் வருவதற்காக சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்கள் மன்னாரில் கப்பலுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## பாதுகாப்பு நிலைகளுக்குள் மின்மாற்றிகள் வைக்க ஏற்பாடு

மட்டக்களப்பில் சகல மின்மாற்றிகளையும் இராணுவ மற்றும் பொலிஸ் நிலைய வளவுகளினுள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது ஆயுத பாணிகளால் மின் மாற்றிகள் சேதமாக்குவதை தவிர்க்கவே இந் நடவடிக்கை.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி போன்ற முஸ்லிம் பிரதேச மின்மாற்றிகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள மின்மாற்றிகள் இவ்வாறு படையினர் நிலையங்களினுள் பொருத்தப்பட்டு விட்டன.

முஸ்லிம் பிரதேசங்களிலும் சகல மின்மாற்றிகளையும் சுற்றி 30 அடி உயர மதில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை இம்மாவட்டத்தில் 80 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளதால் மின்சார சபைக்கு 3 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது

உள்ளதை உள்ளபடி ஊருக்கு எடுத்துரைக்கும் வார இதழ்

## உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்கள்

# பொறுப்பை ஏற்காமையால் செயற்பாடுகள் தேக்க நிலைமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் சிலர் பதவிப் பொறுப்புக்களை இதுவரை ஏற்றுக்கொள்ளாததால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 18-ம் திகதி முதல் விசேட ஆணையாளர்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனால் கொள்வனவு, மற்றும் கொடுப்பனவு விடயங்களில் பல சிக்கல்கள் ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

சந்தைகள் பராமரிப்பு, சுகாதார சேவைகள், மற்றும் அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்வதற்கான கொடுப்பனவுகளை விசேட ஆணையாளர்கள் சுயமாக மேற்கொள்ள முடியாத நிலைமை இருப்பதாகவும் தெரிய வருகிறது.

தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பதவிப் பொறுப்புக்களை ஏற்காமல் இருப்பது யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள விசேட நிலைமையாக உள்ளதாக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறு பதவிப் பொறுப்புக்களை ஏற்காவிடத்து மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### யாழ். குடாநாட்டில்

## தற்கொலை முயற்சியும் விவாகரத்து வழக்கும் அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது தற்கொலை எத்தனிப்புக்களும், விவாகரத்து வழக்குகளும் மிகவும் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகிறது. கடந்த ஆண்டின் முதல் மூன்று மாதத்தில் மட்டும் சுமார் 135 தற்கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பத்துப் பேர் பலியாகியுள்ளனர்.

இவர்களின் சுமார் எழுபத்தைந்து சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் 17 - 22 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என்பது எவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கும் ஒன்றாகும். காதல் தோல்வி மற்றும் குடும்ப பிணக்குகள் போன்றவையே தற்கொலைக்கான உந்துதலைக் கொடுக்கின்றன என்பது எவரையும் கவலை கொள்ள வைக்கக் கூடியதாகும். (என்)

## நூற்றாண்டு விழா நினைவாக...

## பெரியவர் பெரியவரே!

தமிழ் மக்களுடைய அபிப்பிராயம் கோரப்பட்ட போதெல்லாம், உரிமைப் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்றே அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என்பது தெளிவாகின்றது. தமிழ்ப் பொது மக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தம இலக்கில் இருந்து தவறமாட்டார்கள் என்ற பெரிய நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எமது மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றி கொண்டிருக்கும் உறுதியான அரசியற் கொள்கையே எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும்.

நாம சிறந்த முறையில் நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால் எமது மக்கள் கட்டாயம் எம்மை ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்திற்கு காரணமாய் இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும்.

— தந்தை செல்வா

# அம்பலத்தரங்கு



— ஊடுருவி

☐ அறிவுக் கண்களைத் திறக்க வேண்டிய விஞ்ஞான மணிகளுக்கு ஆதரவான நாடகம் மூட நம்பிக்கைகளை வளர்ப்பதாக அரங்கிலிருந்து வெளியேறியரசிகர் ஒருவர் வெதும்பினார். விழியின் கடர் எழுப்பும் பிரகாசம் அறிவின் கண்களைக் குருடாக்கி விடுமா?

☐ யாழ்ப்பாணத்தில் கிரிக்கட் இப்போ நல்ல வியாபாரமாகியுள்ளதாம் நுழைவுக்கு, நின்று பார்க்க, கைச்செலுக்கு என்றெல்லாம் கட்டண வசூலிப்புக்களாம் எல்லாம்! ஒரு விளையாட்டுத்தான்.

☐ கொக்குவில் மத்திய கல்லூரி, கொக்குவில் யாழ்ப்பாணக் கல்லூரி, சாவகச்சேரி மத்திய கல்லூரி இப பாடசாலைகள் எங்குள்ளன? போர் முனையின் பூகோள நிலைமைகள் தான் அறிவது கடினம் என்றால் பாடசாலைகளின் பெயர், அமைவிடங்களையாவது கொழும்புப் பத்திரிகையாளர்கள் சரிவர தெரிந்து வைத்துக் கொள்ளக் கூடாதா என்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர்.

☐ யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பாவித்த- பழைய பேருந்துகளை அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது தெரிந்ததே. புதிய பேருந்துகள் அனுப்பப்பட்டால் சில சமயம் ஒளியூட்டப்பட்டு விடலாம் என்ற அச்சம் கலந்த முன்னெச்சரிக்கையாக இது இருக்கலாம் என்கிறார் நடுத்தர வயதைக் கடந்த ஒருவர்.

☐ 'சமரசம் உலாவும் இடமே — இது சமரசம் உலாவும் இடமே'

ஆண்டியும் இங்கே அரசியல் வாதியும் இங்கே டாக்டரும் இங்கே நோயாளியும் இங்கே! எல்லாரும் ஒன்றாய் சைக்கிள் உருட்டிச் செல்வதால் இது சமரச உலாவும் இடமே என்று முணுமுணுத்தபடி சென்று கொண்டிருந்தார் ''சென்றிப் பொயின்ட்டில்'' ஒருவர்.

☐ யாழ்ப்பாணத்தில் இப்போ மூன்று வகையான தொலை பேசி அழைப்பிடங்கள் சொறார் நகரப் பகுதியில் அங்கிங்கு புழங்கும் ஒருவர். பத்துகளும் மேற்பட்ட தொலைபேசி அழைப்பிடங்கள இருக்க; அதென்ன மூன்று வகை? ஒன்று 'தர்ம பூத்' மற்றது நிவாரண பூத் அடுத்தது 'பணக்கார பூத்'

ஆச்சரியத்தால் விழி பிதுங்கியது.
அரசியல் கட்சி அலுவலகங்களில் வழங்கப்படும் இலவச சேவை 'தர்ம பூத்'
இரண்டு ரூபாக் குற்றி போட்டுக் கதைப்பது 'நிவாரண பூத்'
தொலைத் தொடர்பு அழைப்பகங்களில் எடுக்கப்படுவது 'பணக்கார பூத்'
அவர் விளங்கினர்
இன்னுமொன்று உண்டு அது
'அந்தரங்கபூத்' என்றார் இன்னுமொருவர்

அரசாங்க அலுவலகங்களில் இருக்கும் தொலைபேசிகளில் பலவும் ஊழியர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுவதைச் சொன்னாரோ? என்னவோ?

☐ 'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்'

என்பது பழந்தமிழ்ப் பொன்மொழி, ஆனால் தற்போதுள்ள யாழ்ப்பாண நிலைமையில தொண்டு செய்ய வந்திருக்கும் வெள்ளை உலகத்தினரின் செயற்பாடுகள் பலரையும் வெதும்பச் செய்கின்றதாம். மில்லியன் கணக்கில் ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பகுதி தொண்டு நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகளுக்கே போகிறதாம் வெளிநாட்டவர் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் ஒவ்வொரு தினத்திற்கும் வதிவிடச் செலவாக சுமார் 1500 ரூபா செலவிடப்படுகிறதாம். ஆங்காங்கே ஒரு சில பயனாளிகளும் எம்மவர்களாக இருக்கிறார்களாம். அவர்களும் வேலிக்கு சாட்சி சொல்லும் ஓணான்களாக.

☐ வடமராட்சியிலுள்ள இளைஞர் சேவைக் கழகத்தினை இணைப்பதிகாரியின் சேவைகள் பற்றிப் பெருமிதமாகச் சொல்லிக்கொள்கின்றனராம். யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் மாற்றித்தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளதாகக் கேள்வி.

☐ 1995ம் ஆண்டிலும் அதற்கு முன்பாகவும் கல்விக்காக கொள்வனவு செய்யப்பட்ட பல விதமான பொருட்களும் திணைக்கள அலுமாரிகளில் பவுத்திரமாகத் தூங்கி கொண்டிருக்கின்றனவாம்,

☐ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்காமையால் பல்வேறு விதமான நிர்வாகச் சிக்கல்களும் தலைதூக்கி வருவதாக உள்ளூர் மட்டங்களில் புகைச்சல். சம்பந்தப்பட்ட சபைகளுக்கு பொறுப்பானவர்களை அழைத்து தொலைபேசி மூலம் தேவைகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டனராம் கொழும்பிலுள்ளவர்கள் என்று கேள்வி சபைகளையும் 'ரிமோட் கொன்ரோல்' மூலம இயங்க வைக்க முயற்சி எடுக்கப்படுகிறதோ என்று முணுமுணுக்கிறார் சிறீமான் பொதுஜனம்.

☐ அச்சுறுத்தல் கடிதங்கள் அலுவலக முகவரிகளுக்கு சரியாக வந்து சேருவதால் பிரதிநிதிகள் முழிபிதுங்குவதாக கிசுகிசுப்புகள் கேட்கிறது.

☐ வேலை வாய்ப்புத் தருவதாகக் கூறி சுயவிபரம் சேகரிக்கும் வேலையில இப்போது தேசியக் கட்சியினரும் மும்முரமாகி வருகின்றனராம்.

☐ குடாநாட்டில உள்ள படையினருக்கு ஆளும் கட்சி மீதான விசுவாசத்தை எப்படி அளப்பது?

அவர்களுக்கு அக்கட்சியின் நிறம்மீது கொள்ளை மோகம்! சந்திகள் தோறும் உள்ள சென்றிகளுக்கு கட்சி நிறப்பூச அயலில் உள்ள மக்களிடம பெயின்ற் கேட்கிறார்களாம்!

மக்கள் முழிக்கிறார்கள். கொடுக்கா விட்டால் நாளைக்கேதும பிரச்சினை வரும் என இது போக கட்சி நிறமோகம பெயின்ற் உடன் நின்றால் பரவாயில்ல.

'கட்சி நிறத்தில்' வீடியோ கசெட் 'கட்சி நிறத்தில்' பத்திரிகை - தமிழ் என்றாலும் பரவாயில்லையாம் - எனத்தேடி அலைகிறார்களாம படையினர்.

☐ பாதுகாப்பு படையினரைக் 'காக்கிச் சட்டைக்காடையர்' என்று பொதுக் கூட்டங்களின் போது மேடைகளில் பேசி வாங்கிய சட்டத்தரணிகளில் சிலர் இப்போது படையினர் சார்பாக நீதிமன்றங்களில் ஆஜராகி வாதாடுவதற்காகப் போட்டி போடுகிறார்களாம்,

# பேச்சுக்களுக்கான முயற்சியில் பேசவேண்டிய விடயங்கள்...

தெற்கிலிருந்து நல்லெண்ணத் தூதுக்குழு கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவிக்கலாம் என்று ஐ.தே.க தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பான சக்திகள் அதிகாரப் பொறுப்பை ஏற்றுள்ளதால் கொழும்பில் கலக்கம் ஏற்பட்டு இருக்கிறது.

தமிழர் உரிமைகளைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு உதவ முன் வரவேண்டுமென கொழும்பிலுள்ள இந்து அமைப்புக்கள் கூடித் தீர்மானமெடுத்து மகஜர்கள் புதுடில்லிக்கு அனுப்பியுள்ளன.

மாங்குளத்தைக் கைப்பற்றி கிளிநொச்சிக்கான தரை வழிப் பாதையை படைப்பல பிரயோகத்தின் மூலம் திறந்துவிடும் முயற்சியில் ஈடுபட்ட வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கையில் தேக்கமான நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறாக வெளிவரும் செய்திகள் பலவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறி

**— இராசகிளி —**

லங்கா அரசாங்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதற்கான ஏது நிலை தோன்றிவருவதாகக் கோடி காட்டுகின்றன எனச் சில அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்போதைய சர்வதேச அரசியல் சூழலிலும் மோதலைத் தணித்து பேச்சுவார்த்தைகளுக்கும் உடன்படிக்கைகள் எட்டப்படுவதற்குமான முயற்சிகளே முனைப்பு பெற்று வருகின்றன. நீண்டகாலமாக போராடி வரும் அயரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியற் பிரிவான சின்பெய்ன் பிரிட்டன் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. பிலிப்பைன்சின் மின்டானோ கிளர்ச்சிக்காரர்களுடன் பிலிப்பைன்சு அரசு உடன்படிக்கைகளை எட்டியுள்ளது. கம்போடியாவில் தீவிரமான போட்டியில் இறங்கியிருந்த குழுக்களுக்கிடையே சமரச முயற்சிகள் ஈட்டப்பட்டுள்ளது. இவ்வாறாக பல்வேறு இடங்களிலும் போர் முனைப்புக்கள் தணிக்கப்பட்டு, அரசியல் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுவருவது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த வரையில் தமிழ் பேசும் மக்களுக்கு கசப்பான அனுபவங்களே வாய்த்தன என்பதை மறுப்பதற்கில்லை. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன அமுலுக்கு வராத காலம் முதல் மற்றும் இந்திய இலங்கை ஒப்பந்தம் கடைசியாக இடம்பெற்ற யாழ்ப்பாணப் பேச்சுவார்த்தைகள் ஈறாக அனைத்துப் பேச்சுவார்த்தை அரங்குகளிலும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படுவதற்குக் கவனம் காட்டப்படவில்லை என்றே கூறலாம். இருந்த போதும் இனப் பிரச்சினைக்கு நீடித்த நியாயமான தீர்வு காணப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்பதுவே கிட்டத்தட்ட அனைவரதும் ஒருமித்த எதிர்பார்ப்பாக உள்ளது எனலாம். இந்தப் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதற்கு

கவலையுடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

எனவே தான் பேச்சுவார்த்தை மேசைகளில் கூட அடிப்படைப் பிரச்சினைகளுக்குப் பதிலாக அன்றாடப் பிரச்சினைகள் முதலிடம் பெறுகின்றன. அடிப்படைப் பிரச்சினையாகவுள்ள இனப் பிரச்சனைக்கு பொருத்தமான மாற்றுத் தீர்வு காணப்பட்டு அமுல் படுத்தப்படுமானால் பல அன்றாடப்பிரச்சினைகள் அடியோடு மறைந்து விடுமென நம்பலாம். உதாரணமாக போர் தொடர்ந்து நீடிப்பது பொருத்தமானது - தேவையானது என்ற நிலைமை மாறும் போது சந்தேகத்தின் பேரிலான கைதுகளும், காணாமற் போவதும் நின்று போகலாம்.

இந்த நிலைமைகளை உன்னிப்பாக உற்று நோக்கும் போது 'தமிழீழத் தனியரசு' என்பது எட்டப்படக் கூடிய அரசியல் இலக்காக நம்பிக்கை கொள்ளும் நிலைமை இப்போதில்லை என்கிறார் அரசியலில் ஆர்வமுள்ள ஒருவர். இந்நிலையில் இலங்கைத் தீவின் ஒருமைப்பாட்டிற்குள் இனப்பிரச்சினைக்கு பொருத்தமான மாற்றுத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்தத்தீர்

## அரசியல் அரங்கம்

பொருத்தமானமூன்றாம் தரப்பின் உதவியும், ஒத்துழைப்பும் தேவை என்ற கருத்தும் பரவலாக உள்ளது.

சிறிலங்கா அரசின் ஆளுகையை ஏற்க மறுத்து படையினருடன் போரிடும் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எந்த சக்திகளும் இல்லை என்பது தெளிவானது. எனினும் சிறிலங்கா அரசின் இறையாண்மையையும் - இலங்கைத் தீவின் ஒருமைப்பாட்டையும் ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கருத்து இப்போதும் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை சிறிலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவிகளில் தங்கியிருக்கும் நிலையும் அரசாங்கத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடும் போககும், இலங்கைத் தீவின் ஒருமைபபாட்டை ஏற்கத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்ற கூற்றைப் பொய்ப்பித்து விடுகிறது. அத்துடன் 'தமிழீழத் தனியரசு' என்ற அரசியல் இலட்சியத்தை முழுமனத்துடன் ஏற்று, ஆதரவு தெரிவித்தவர்கள் மத்தியில் கூட வெளிப்படையாக நியாயப்படுத்தும் போக்கு மெலிந்து வருவது

வைத்தேடும் முயற்சியில் எல்லாத் தரப்பினரும் அக்கறையுடன் செயற்பட வேண்டியதே இன்றைய நிலையில் மக்களின் எதிர்பார்ப்பு எனலாம்.

எனினும், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அரசியல் சக்திகள் இந்தக் காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படுவதாகத் தெரியவில்லை என்பதே பொதுமக்களின் விசனமாகும். ஆயுதக்குழுக்கள் என்று முத்திரை குத்தி ஒரு சாராரை ஒதுக்கி விட்டு புனிதமான அரசியல் பேசுபவர்கள் ஒருபுறமும், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக அங்கீகாரம் பெறும் அதேவேளை தேசிய துணைப் படையினராக செயற்படும் இருமுகத் தோற்றம் மறுபுறமும், எதையும் ஒளிவு மறைவின்றிப் பேசாத அந்தரங்கம் காக்கும் சூழல் இன்னுமொரு புறமும் நீடிக்கும் நிலைமையில் ஜனநாயக நீரோட்டத்திலுள்ள சக்திகளிடையே அரசியல் ஒருமைப்பாட்டுணர்வும் எட்டாக்கனியாகவே உள்ளது.

ஏறத்தாழ நாற்பது ஆண்டு கால அரசியலுக்கு ஊடாக சாதிக்கப்பட்டிருக்காத வடக்கு - கிழக்கு இணைப்பு மற்றும் மலையக மக்களின்

(12-ம் பக்கம் பார்க்க)

# யாழிலிருந்து மீனவர்கள் குழு விரைவில் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா மீனவர்கள் எதிர்நோக்கும் பல்தரப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயுமுகமாக விசேட மகாநாடு ஒன்று விரைவில் கொழும்பில் இடம் பெற உள்ளது.

மீன்பிடி அமைச்சின் வேண்டுகோளின் பேரில் நடைபெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக யாழ்ப்பாணத்திலிருந்து விசேட குழு ஒன்று விரைவில் கொழும்பு பயணமாக உள்ளது.

அடுத்த வாரம் அளவில் பெரும்பாலும் இம்மாநாடு இடம் பெறும் என அறியப்பட்டுள்ளது.

இதே வேளையில் வடபகுதி மீனவர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயுமுகமாக இங்கு வந்த நோர்வே நாட்டை சேர்ந்த பிரதிநிதிகள் வட பகுதி இராணுவ பொறுப்பதிகாரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதும் சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

# வாகனப் பதிவுக்காக கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கான கால எல்லை ஏப்ரல் மாதம் 30 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக வாகனப் பதிவுகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாகனப்பதிவு எல்லை கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தாலும் கூட வாகன உரிமையாளரின் நலனை கவனத்தில் கொண்டு இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது. (க)

# சிறிலங்காக் கடற்படையினருக்கு சீனா, பாகிஸ்தான் பயிற்சி?

சிறிலங்காக் கடற்படைக்கு சீனாவும், பாகிஸ்தானும் போர்க்கப்பல்களை வழங்கியுள்ளதுடன் அதற்கான பயிற்சி வசதிகளையும் வழங்க முன்வந்திருப்பதாக தெரிய வருகிறது.

இதன் ஒரு கட்டமாக சீனாவிடமிருந்து அதி வேக தாக்குதல் படகுகள் எடுத்து வரப்பட்டுள்ளதாம். இந்தப் படகுகளைக் கையாள்வது தொடர்பான பயிற்சிகளை வழங்க சீனாவிலிருந்து விசேட கடற்படைக் குழுவொன்று கொழும்புக்கு வந்து தற்போது துரித பயிற்சிகளை வழங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை பாகிஸ்தானிடமிருந்தும் அதிவேக தாக்குதல் படகுகள் வாங்கத் திட்டமிட்டப்பட்டுள்ளதாகவும், இதற்காக பாகிஸ்தானுக்கு சிறிலங்கா கடற்படையின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று சென்று திரும்பியுள்ளதாகவும் தெரிய வருகிறது. பாகிஸ்தானுக்கு சென்ற கடற்படைக் குழுவில் வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி.டபிள்யூ.கே.சந்திர, கப்டன் சரத் வீரசேகர மற்றும் இரு கப்டன்களும் இடம்பெற்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

# தெறிப்புகள்

கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்புக்கு உள்ளான போது வெளியிடப்பட்ட சில கருத்துக்கள்:

★ தமிழரின் ஆலயங்கள், புனித இடங்கள், என்பவற்றை அரசு அழித்தது. தமிழர்களின் சுய நிர்ணய உரிமைகள், ஆளும் உரிமைகள் ஆகியவற்றை அரசு மறுத்தது. யுத்தத்தை அது தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. தலதா மாளிகையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பை அநியாயம் எனக் கூற அரசின் பக்கத்தில் எந்த நியாயமும் இல்லை.

—நவசமசமாஜக் கட்சித் தலைவர்
டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன.

★ புனித தலதா மாளிகை தாக்கி நாசப்படுத்தப்பட்டுள்ளது பௌத்த - சிங்கள மக்களை புண்படுத்தி அவர்களது ஆத்ம கௌரவத்தைப் பாதித்துள்ளமை மிகவும் கவலைக்குரியது. இது அநாகரீகமான - வெறுக்கத்தக்க - மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய பயங்கர வாதச் செயல். அதேவேளை நமது நாட்டில் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஏன் சில விகாரைகள் கூட சில தரப்புக்களால் தாக்கி அழிக்கப்பட்டதை எவரும் மறந்து விட முடியாது. இப்பொழுது உரத்துக்கத்துகின்ற சிலர் முன்பு புனித வணக்கத்தலங்கள் தாக்கி அழிக்கப்பட்டபொழுது மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர் அல்லது அனுசரணையாக இருந்து ஊக்கப்படுத்தினார்கள்.

வணக்கத்திற்குரிய புனித ஸ்தலங்களை இப்படி மிலேச்சத்தனமாக தாக்குவதற்கு வழி வகுத்தவர்கள் யார்?

பெப்ரவரி விபவி —98—

# தொடரும் துரதிஷ்டமான சம்பவங்கள்!

தெளிவான வேலிகள் எது வும் இல்லாமல் நெருக்கமாக இருந்தது அக் குடியிருப்பு, பகல முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்த களைப்பு, இரவில் ஒன்று கூடியிருந்து கதைக்கவும் உணவருந்தவும் அவன்று கொண்டிருந்தது. அப்பொழுது தான் அந்த துர்ச் சம்பவம நடந்தேறியது.

குடிபோதையில் குடியிருப் புக்குள் நுழைந்த அவன் முதலில் பாலசிங்கம் வீட்டு லாம்புவை தூக்கி வீசினான். சையிக்கிளையும் தூக்கி வீசி னான. அத்துடன் குடியிருப் பின் அமைதி குலைந்து விட் டது. பெண்களும் குழந்தை களும் வீரிட்டனர். ஆண்கள் பயப் பிராந்தி கொண்டு

விட்டது, கணவனும் அயலவர் ஒருவரும் வெறியனுடன் மோதி பிறேமலதாவை மீட்டனர். இறுதியில் குடியிருப்பே திரண்டு அவனைச் சுற்றி வளைத்து நையப் புடைத் தனர். பின்னர் மின்சாரக் கம்பம் ஒன்றில் கட்டிவிட்டு, பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். பிறேம லதா, அவளது கணவர், அயலவர் ஆகியோர் ஆஸ்பத் திரிக்கு சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இது அண்மையில் திருநெல் வேலியில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு முயற்சி குறித்து அவ்வூரவர்கள் தெரி வித்தது.

நீண்ட சண்டைகளும், அகதி வாழ்க்கையும் எம்மை நன்கு களைக்க வைத்து விட்டன. எமக்கு அமைதி வேண்டும். அதை எந்தப் பிசாசு கொண்டு வந்தாலும் பரவாயில்லை என்கிறார் யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவர்.

எனினும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் போர் உத்தியின் ஒரு வடிவமாக இருக்கின்றதோ என்ற ஐயப்பாடும், துரதிஷ்டவசமான ஒரு சில சம்பவங்களால் இராணுவத்தினருக்கும், அரசிற்கும் எதிரான உணர்வலைகளும் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை.

செய்வதறியாது திகைத்தனர். பெண்களும் குழந்தைகளும் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்காக ஓடினர், அப் பொழுது 28 வயது ரஜிதா அவனது கையில் மாட்டிக் கொண்டாள். ரஜிதா அவனு டன் சண்டையிட்டு அவனது வெறிப்பிடியில் இருந்து சாது ரியமாக இருளில் தப்பிக் கொண்டாள். வெறியன் தொடர்ந்தும் அங்கும் இங்கு மாக இரைதேடி அலைந்தான்.

குச்சொழுங்கையூடாக ஓடி வந்த 3 குழந்தைகளின் தாயும் 4 மாதக் கர்ப்பிணியான பிறேமலதா (28) வகையாக அவன் பிடிக்குள் மாட்டிக் கொண்டாள். அவளது அலறல் குடியிருப்பையே உலுக்கி

இச்சம்பவம் நடந்து ஒரு கிழமைக்குள் சாவகச்சேரிப் பகுதியில் வாய் பேச முடியாத இளம் பெண் ஒருவரை படை யினர் அருகிலிருந்த பற்றை மறைவுக்குள் இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கினர் எனவும் பின் னர் இப்பெண் தற்கொலை முயற்சியில் இறங்கினார் எனவும் செய்திகள் தெரிவிக் கின்றன. இதேவேளை சம்பந் தப்பட்ட வட்டாரம் இதை மறுத்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

'இது ஒரு சிறு சம்பவம் எப்போதாயினும் ஒண்டு பாதி எங்கேயும் நடக்கும். இதை யெல்லாம் தூக்கிப் பிடித்தாப் பிரச்சனை. என்கிறார்கள்.

உள்ளதை உள்ளபடி எடுத்து ரைப்பது உயர்வற்றது என கருதுபவர்கள்.

யாழ்ப்பாணத்தில் கிரிஷாந்தி, ரஜினி அம்பாறையில் கோணேஸ்வரி என தொடர் கின்ற பாலியல் வல்லுறவு (க் கொலை) தொடரை தொ

மக்களின் நியாயமான பயப் பிராந்தி, அகப்புறச் சூழலி னால் ஜனநாயக வழிக்கு வந்த தமிழ் கட்சிகள் மீது வெறுப்பை விட்டெறிகின்றன. மக்களின் துயர்களைக் களைவதற்கு பதி லாக கையாலாகாதவர்களா கவும், மக்களின் கண்ணீரில்

நிகழ்ந்த சுற்றி வளைப்பில் "புலிகள் எம்மைத் தாக்கினால் உங்கள் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவோம்" என்றார் ஒரு சிப்பாய். இது பாலியல் வல்லுறவை ஒரு போர் உத்தியாக கருதும் மன நிலை படையினர் மனங்களில் உள்ளதைக் காட்டுகிறது.

தொடர்ந்து நிகழும் பாலி யல் வல்லுறவுகளுக்கு குரல் கொடுக்க யாரும் திராணியற்ற வர்களாக உள்ளனர். உலகப் பெண்கள் தினம் கொண்டாடு

# மேலோங்கும் அதிருப்திகள்!

மும்.? யார் இதைத் தடுத்து நிறுத்துவது? என்பன எல்லோர் மனங்களில் இருந்து எழுகின்ற கேள்விகள்.

பாலியல் வல்லுறவின் பின் னர் குரூரத்தனமாக கொலை செய்யப்பட்ட தாய் கோணேஸ் வரி கொலை வழக்கில் சம்பந்

## அன்பன்

தப்பட்டவர்கள் தண்டனை பெற்றதாக தெரியவில்லை. தற்பொழுது கிரிஷாந்தி கொலை வழக்கிலும் சந்தேக நபர்கள் செம்மணி நிகழ்ச்சி இடம் பெற்று விட்டது.

படை தரப்பு வட்டாரங்கள் இது வரைக்கும் பகிரங்மாக எந்தவொரு சம்பவத்திற்கும் பொறுப்பேற்கவில்லை. சம் பந்தப்பட்டவர்களிடம் நீதி விசாரணை மேற்கொள்வ தாகக் கூறி தமது நலன்களை பாதுகாத்துக்கொள்ளும மனோ நிலையில் இருந்து வருகி றார்கள்.

'நாங்கள் ஆமிக்கு பயந்து சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்து போனோம். வன் னிக்கு போக முடியவில்லை. பிறகு சனம் எல்லாம் பிரச் சனை இல்லை எண்டு யாழ்ப் பாணம் திரும்பிச்சு. பின்னர் நாமும் ஆமி பிரச்சனை தராது என நம்பி வந்தோம். ஆனால் நிலைமை இப் பொழுது பய மாக இருக்கிறது. இப்படி நிலைமை எனில் வன்னிக்குப் போய் பட்டினியால் சாகலாம்' என்கிறார் திருநெல்வேலியில் உள்ள வயோதிபர் ஒருவர்.

அரசியல் நடாத்தும் பிழைப்பு தாரர்களாகவும், சாதாரண இருப்புகளை நிலை நிறுத்த அரசியல் நடாத்தும் குழுக் களாக இந் நிலைமையில் கணிக்கப்படுகின்றன என்றார் பல்கலைக் கழக மாணவர் ஒரு வர். தமிழர்களின் உணர்வ லைகளை புரிந்து கொண்டு குரல் கொடுக்கக் கூடிய அர சியல் பிரதிநிதியாக எவரை யும் இனங்காண முடியவில் லையே என்கிறார் ஒருவர், பாலி யல்வல்லுறவும் பிரச்சினை ஒரு சமூகப் பிரச்சினை. சந்தர்ப் பங்களும் சூழலும் தான் இப் பிரச்சினையை தோற்றுவிக்கி றது. எமது மக்களின, படை



யினருடனான உறவுகள் என்று சொன்னாலும் மிகையில்லை இதை வைத்து இப்பிரச் சினைக்கு அரசியல் சாயம் பூசுவது ஏற்புடையது அல்ல என்கிறார் அரசியல் ஆர்வலர் ஒருவர்.

இதே வேளை மட்டக்களப்பு பிள்ளையார் கோவிலடியில்

பவர்கள் உள்ளூர்ப் பெண்கள் மீது இழைக்கப்படும் வன்முறை களை காணாதவர்கள் போல் இருக்கிறார்கள். என்றார் நடுத்தர வயதைக் கடந்து விட்ட ஒருவர் நீண்ட சண்டை யும் அகதி வாழ்க்கையும் எம்மை நன்கு களைக்க வைத்து விட்டன. எமக்கு அமைதி வேண்டும். அதை பிசாசு கொண்டு வந்தாலும் பரவா யில்லை. என்றார் ஆசிரியர் ஒருவர்.

நிலைமை எதுவாகிலும் தொடரும் படையினரின் பாலி யல வல்லுறவுச் செயல்கள் வெறும துரதிஷ்டமான சம்ப வங்களாகவோ அல்லது ஒட்டு மொத்தமான சமூகவியல் பிரச சினையாக பார்ப்பதற்கு

மேலாக உள்நோக்கங்களுடன் பார்க்கப்பட வேண்டிய தேவை எழுந்துவருகின்றது. இது மக்கள் குறித்த இராணுவத்திற் கும அவர்களால் பிரதிபலிக்கப் படும் அரசிற்கும எதிரான உணர்வலைகளையே எப் போதும் எழுப்பிக் கொண்டி ருக்கும என்பதில் சந்தேக மில்லை.

| திகதி | பெயர் | இடம் | வன்முறை விபரம் |
|---|---|---|---|
| செப் 96 | கிரிஷாந்தி குமாரசாமி | கைதடி | 11 இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவின் பின் கொலை |
| செப் 96 | இராஜினி வேலாயுதபிள்ளை | கொண்டாவில் | 6 இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவின் பின் கொலை |
| நவம் 96 | 10 வயதுச் சிறுமி | அச்சுவேலி | இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவு |
| நவம் 96 | 44 வயதுப் பெண் | மட்டக்களப்பு | ஐந்து படையினரால் பாலியல் வல்லுறவு |
| ஜன 97 | கணவனுக்கு உணவு எடுத்துச் சென்ற பெண் | மட்டக்களப்பு | 3 அதிரடிப் படையினரால் பாலியல் வல்லுறவு |
| ஜன 97 | ஒரே வீட்டைச் சேர்ந்த 3 பெண் | மட்டக்களப்பு | 3 இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவு |
| ஜன 97 | பெண் ஒருவர் | வவுனியா | பொலிசாரினால் பாலியல் வல்லுறவு |
| ஜன 97 | 30 வயதுப் பெண் | மண்டூர் மட்டக்களப்பு | STF இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவு |
| பெப் 97 | 15 வயதுப் பெண் | கந்தளாய் | ஊர்காவல் படையினரால் பாலியல் வல்லுறவு |
| மே 97 | கோணேஸ்வரி | அம்பாறை | பொலிஸ் குழுவால் பாலியல் வல்லுறவின் பின் கைக்குண்டை பெண்குறியுள் வைத்து வெடிக்கச் செய்து கொலை |
| ஜூலை 97 | விஜயராணி | அராலி | இராணுவத்தால் பாலியல் வல்லுறவு |
| ஜூலை 97 | சந்திரகலா | வல்லைவெளி | இரு இராணுவத்தால் பாலியல் வல்லுறவு |

ஒகஸ்ட் 1996 இலிருந்து ஜூலை 1997 வரையிலான காலப்பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு சம்பவங்கள் குறித்து கொழும்பு விழிப்பு ஒன்றியத்தால் முப்போழிகளிலும் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்திலிருந்து.

மீன்பிடி, விவசாய முயற்சிகளில்

# தொழிலைச் செய்யவிடு எனக்கோரி உற்பததியில் ஈடுபடுவதும் அரசியல் போராட்டமே

## கலாநிதி நா. சண்முகரட்ணம்

நோர்வேயிலுள்ள விவசாய பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள சர்வதேச சூழல் அபிவிருத்தி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவர் கலாநிதி நா. சண்முகரட்ணம் அவர்கள். அங்கு அபிவிருத்தி கற்கைத் துறைப் பேராசிரியராகவும் சர்வதேச கல்வித்துறை இயக்குனராகவும் கடமையாற்றுகிறார். இலங்கைத் தமிழர்களின் அரசியற் பிரச்சினையிலும், சமூக அபிவிருத்தியிலும் அக்கறை காட்டிவரும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இடது சாரி அரசியலில் நாட்டமுள்ள இவர், சமுத்திரன் என்ற பெயரில் Lanka Guardian இதழிலும் எழுதியுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் காலைக்கதிருக்கு அளித்த பிரத்தியேக செவ்வி இங்கே தரப்படுகிறது.

☐ உங்கள் யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் பற்றிக் கூறுங்கள்?

நோராட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள நோர்வே தூதுவரகம் யாழ்ப்பாணத்தில் கடற் தொழிலாளர்களின் நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அழைத்தது. இதற்காக நோர்வேயைச் சேர்ந்த டக்ஜே மார்ட்டினி, கமலசிறி நிசிங்க ஆகியோருடன் யாழ்பாணம் வந்துள்ளேன்,

☐ யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு வார காலம் தங்கியிருந்த நீங்கள் இங்குள்ள நிலைமைகள் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?

வன்னியில் இருந்ததைவிட இங்கு நிலைமை மோசமாக இருக்காது என்ற எதிர்பார்ப்பிலும் தத்தம் வீடுகளுக்கு வந்து சேரும் நோக்கிலும் அரசின் பல்வித அறிவிப்புக்கள் கொடுத்த எதிர்பார்ப்பிலும் தமது வாழ்வை மீளமைக்க மக்கள் இங்கு திரும்பியிருக்கலாம். ஆனால் நானறிந்த வகையில் நிலைமை சீரடைந்ததாக இல்லை. ஒரு வருடத்திற்கு முந்தியதைவிட இப்பொழுது மக்களின் வாழ்க்கை வசதி அதிகரித்து விட்டது என்று சொல்ல முடியவில்லை,

சில பகுதிகளில் கடற்தொழில் செய்யக் கூடியதாக இருந்தும், பல விதமான தடைகள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள சிலர், இங்கு சுமுக நிலை உள்ளதாக கருதலாம், இங்குள்ள நடுத்தர வர்க்கத்தினருக்கு வெளிநாட்டுப் பணம் வரக்கூடும். இவர்களுக்கு உடனடிப் பொருளாதாரப் பிரச்சினை இல்லாமல் இருக்கலாம். இந்நிலையில் இவர்களுக்கு நிலைமை நல்லதாக இருக்கலாம்.

☐ யாழ்ப்பாணத்தின் அடிப்படை பொருளாதார முயற்சி பற்றி—

விவசாயமும், கடற்தொழிலும், இங்கு ஒழுங்காக செயற்படாத நிலையில உள்ளது இந்த நிலையில் இத் தொழில் புரிபவர்கள் நிவாரண உதவிகளிலேயே தங்கியுள்ளனர். விவசாயம் ஓரளவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயினும் உள்ளீடுகள் பிரச்சினை – விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பிரச்சினை – என்பன உள்ளன அத்துடன் விவசாய கடற்தொழில் முயற்சிகளுக்கு தெளிவான திட்டம் எதுவும் இல்லை இவற்றை அபிவிருத்தி செய்ய திட்டம அவசியம், இப்போது யுத்தம் நடக்கிறது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமுகத்தை எப்படி விருத்தி செய்வது என்பது கேள்வி.

☐ போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் எப்படி அபிவிருத்தி திட்டங்களை வகுக்க முடியும்?

முடியும், போர் நடக்கும்போதும், நிவாரணத்தில தங்க வைக்காது அவர்களை உற்பத்தியில் ஊக்குவிக்க வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பல நாடுகளிலும் நிவாரணத்தல் மட்டுமே மககளை தங்க வைக்கக் கூடாது என்ற கருத்து நிலவுகிறது.

☐ போர் ஒய்ந்த பின்பே அபிவிருத்தி என்பது பற்றி...

எனது எண்ணத்தில் விவசாயிகள் தம் உற்பத்தியை தொடர்ந்து மேற்கொள்வதும் ஒரு அரசியல போராட்டம் தான், மீனவர்கள் தொழிலுக்கு செல்வதும் கூட ஒரு அரசியல் போராட்டம் தான். தொழிலைச் செய்ய விடு என்று கோருவது அரசியல் உரிமை. நிவாரணத்தில் தங்கியிருக்கும்போது அந்த அரசியல் தன்மை மழுங்கடிக்கப்படுகிறது. நிவாரணத்தில் நீண்டகாலம் தங்கியிருக்கும்போது சமுக நிலைமையைக்கூட மாற்றிவிடும், புலிகளின் காலமாக இருந்தாலென்ன, இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்தாலென்ன மக்கள் உயிர்வாழ வேண்டும். அதற்கு உற்பத்தி தொடர வேண்டும்,

☐ இலங்கைத் தமிழர் என்ற வகையில் அரசின் தீர்வுப் பொதி குறித்து உங்கள் கருத்து?

இத்தீர்வுப் பொதி தமிழரிடையே ஆதரவு அலையை ஏற்படுத்தவில்லை. 1996 இல் வந்த தீர்வுப் பொதி நல்ல ஓர் அடிப்படையாக இருந்தது. ஆனால் இப்போதைய பொதி அந்த நிலையிலிருந்து சுருங்கிவிட்டது. பிரதான சிங்கள கட்சிகள் கூட இத்தீர்வுத் திட்டம் குறித்து கருத்தொற்றுமை இல்லை. இது ஓர் ஏமாற்றம் தரும் விடயம். இது போராட்டத்தைத் தான் நியாயப்படுத்தி விடும் இந்தப் போராட்டம் கூட அரசியல் ரீதியில் முழுமையான ஆதரவு இன்மையால் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப் பட்டு நிற்கிறது.

☐ தற்போது யாழ்ப்பாணத்தில் மக்களின் மனோ நிலை எப்படி உள்ளது.

மக்கள் தம் வாழ்வை மீள ஆரம்பிப்பதுவே ஒரு போராட்டமாக கருதுகின்றனர். அவர்கள் ஒரு வித விரக்தி நிலையில் உள்ளனர். அரசியல் தீர்வு வரும் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்துள்ளனர். அன்றாடப் பிரச்சனையே ஒரு போராட்டமாக மக்களிடையே காணப்படுகின்றது.

☐ தற்போது ஜனநாயக வழிக்கு வந்த அரசியல் கட்சிகளால் ஏதும் மக்களுக்காக செய்ய முடியுமா என கருதுகிறீர்களா?

அவர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்கள் ஒரு சமாதான தீர்வை எட்ட நடவடிக்கை எடுக்கலாம். அப்படி நடக்கிறதா என்பது எனக்கு தெரியவில்லை,

☐ அவ்வாறாயின் தற்போதுள்ள அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு பற்றி உங்கள் கருத்து?

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கூட்டணி யாழ் நகரில் வெற்றி பெற்றுள்ளது. ஆயுதம் ஏந்திய கட்சிகளை மக்கள் நிராகரித்துள்ளதாக தேர்தல் முடிவுகளை பார்க்கும் போது தெரிகிறது ஆயுதம் ஏந்தாத குழுவை ஆதரித்ததன் மூலம் ஆயுதம் ஏந்திய குழுக்களுக்கு ஒரு செய்தியை மக்கள் கொடுத்துள்ளனர்.

☐ கடந்த தேர்தலில் குடாநாடு பூராகவும் ஆயுதம் ஏந்திய கட்சிகளுக்கு கிடைத்த ஒட்டுமொத்த வாக்குகளின் எண்ணிக்கை ஆயுதம் ஏந்தாத கூட்டணிக் கட்சிக்கு கிடைத்ததை விட அதிகம் தான்ன?

ஆயுதம் ஏந்தாத கட்சிகள் இத்தேர்தலில் பரவலாகப் பங்கு பெறவில்லை தவிர, இத்தேர்தலில வாக்களித்தவர்களின் விகிதம் என்பதும் முக்கியம்,

☐ ஜனநாயக வழியில் அரசியல் முயற்சிகளை வளர்த்துச் செல்ல வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால் அதில் மக்களையும் அரசியல் ரீதியாக அரவணைத்துச் செல்ல வேண்டும் இந்த வகையில் இத்தேர்தலை தவிர்த்திருக்க முடியுமா?

தவிர்த்திருக்க முடியாது தான் தற்போதைய நிலையில் உடனடிப் பிரச்சினைக்கு தீர்விலிருந்து நீண்ட கால அரசியலுக்கு செல்வது என்ற சவாலை இது வரை இந்தக் கட்சிகள் சரியாக எதிர் கொள்வதாக எனக்கு தெரியவில்லை அவ்வாறு செய்தால் ஜனநாயக மரபினை உருவாக்க உதவியாக இருக்கும்.

☐ அவ்வாறாயின், நீங்கள் குறிப்பிட்ட உடனடிப் பிரச்சினைக்கு தீர்வு நிலையில் இருந்து நீண்ட கால அரசியலுக்கு செல்வது என்ற சவாலை புலிகள் நிறைவேற்றுவார்கள் என எதிர் பார்க்கலாமா?

அவர்கள் நிறைவேற்றுவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை அதேவேளை இராணுவம் இங்கிருக்கும் வரை புலிகள் ஆயுதப் போராட்டம் நடத்தத்தான் போகிறார்கள் எனவே புலிகள் – அரசு பேச்சு இல்லாமல் இந்நாட்டில் சமாதானம் இல்லை என்பதே என் அபிப்பிராயம்.

☐ புலிகள் – அரசு பேசித்தான் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றால் அது தமிழீழ எல்லை பிரிப்புக்கான பேச்சாக இருக்குமா?

இல்லை தனி நாட்டிக்கு குறைந்த தீர்வை முன்வைக்கும் பேச்சுகளாக இருக்கலாம்

☐ அவ்வாறாயின் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தமிழீழக் கோரிக்கையை கைவிட்ட தமிழ் கட்சிகளுடன் பேசி இணக்கத்திற்கு வரமுடியாத அரசு, தனிநாட்டுக்கோரிக்கையை இன்னமும் கைவிடாத புலிகளுடன் பேசி எப்படி தீர்வு காண முடியும்?

பேச்சு நடக்காத வரையில் சமாதானமும் இல்லை அதே வேளை இராணுவ நடவடிக்கையால் புலிகளை முறியடிக்க முடியாது அரசியல் தீர்வு தான் வழி அரசு இதற்கு முன் வரவேண்டும் புலிகளும் இதை ஏற்க வேண்டும் மூன்றாம் தரப்பு இதற்கு உதவ வேண்டும்

தமிழ் கட்சிகள் ஜனநாயக வழிக்கு வந்தும் இன்னமும் மக்கள் மத்தியில் வேருன்றவில்லை. அவர்கள் ஆயுதங்கள் கொண்டு திரிகிறார்கள் மக்கள் இவர்களை இராணுவமாகவே பார்க்கிறார்கள். இவர்கள் ஜனநாயக அமைப்பாக இருக்கலாம். அரசின் பாதுகாப்புடன் அரசின் துணைப்படையாக இயங்கும். இவர்களுடன் அரசு ஏன் பேச முன்வரப் போகிறது. இவர்களுடன் பேசி சமாதானம் வரும் என அரசு எதிர்பாரக்கவில்லை. அரசுக்கு புலிகளுடன் பேசினால்தான் சமாதானம் ஏற்படும் எனத்தெரிந்தும் அதற்கு தயாராக இன்னும் வரவில்லை.

☐ தற்போதைய உலகப் போக்கில் புலிகளின் போராட்டம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

இன்றைய உலகச் சமன்பாடு மாறிவிட்டது அமெரிக்கா உலகப் பொலிஸ்காரன் ஆகிவிட்டது இந்நிலையில் புலிகள் தனிமைப்படுத்தப்படும் நிலையே காணப்படுகின்றது. ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தும் உலக சூழ்நிலை இப்போது இல்லை இப்போது பல நாடுகளில் போராடிய பல அமைப்புகள் பேச்சுவார்த்தைகளை நடாத்துகின்றன உலக நிலைமை அப்படி உள்ளது.

☐ அரசு புலிகள் தடை செய்ததுபற்றி உங்கள் கருத்து?

அரசு, புலிகளை தடை செய்தது பெரிய தவறு. அரசு புலிகளின் தலதா மாளிகை குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சிங்கள பௌத்த பேரினவாதிகளிடம் இருந்து வரும் எதிர்ப்பு அலைகளை சமாளிக்க எடுத்த முடிவுதான் இத்தடை. அதே வேளை புலிகளின் தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றேன். இதுகுறித்து கண்டன அறிக்கையும் வெளியிட்டிருந்தேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைக்கதிர்

## அம்மாவும் அப்பாவும் நானும்

என்ரை உயிர் அம்மா
எப்போதும் போல, அன்று; கந்த சட்டிப் பாரணை.
கறி சோறு வாசனை வந்து
விடிய விடிய
வாய் எச்சில் ஊற வைக்கும்
தாளிக்கப் போட்ட மணம்
தன்பாட்டில் ஏதேதோ நீள முணுமுணுத்து
நெற்றியிலே குங்குமம்
தோய்ஞ்ச தலை; மயிரைத் தொங்கவிளை
ஓர் முடிச்சில் காய்ஞ்சுலரத் தோள் மேலை விட்டு
கழுத்திலே
மஞ்சள் சாரைப் பாம்பாய்த் தாலிக்கொடி நெளிய
பஞ்சிப் படாமல் விரதம் இருந்தாலும்
கன்னை மறந்து தடல்புடலாய்ச் சமையல்
பெரிய தலை வாழை நான்கிலைகள் வெட்டி வந்து
குந்துப் பலகை கழுவி அதன் மேலே
குத்து விளக்கு சிணுங்கி எரிகிறது
அப்பா;
திருநீறு முக்குறியாய்;
சூரிய வெப்பம் படாத உலராத நாலு முழம் கட்டி
அதன் மேல் சிறு சால்வைத் துண்டொன்று
பொட்டு அவர் வாறதை முன் கூட்டியே சொல்லும்
அவசரமாய் கோயிலுக்குப் போற அவதி
சுவரிலே தொங்கும் எதையோ எடுக்கத் தடவி
தடுதாளிப் பட்டுத் தடக்குண்டு
பூக்கூடையோடு புறப்பட்டுப் போகின்றார்
பாக்குப் பழம் வெற்றிலை சாம்பிராணியிலை
தூக்குப்பை இன்னொன்றில்;
துவாய்த் துண்டால்
ஒழுகும் மூக்கைத் துடைத்தபடி நான்;
விடியக் காலை குளிக்க மனசு வராமல்
விறாந்தை விளிம்பிலே குந்தி இருக்க;
விரைவாக அப்பா வலு கெதியாய் வந்தார்;
அடுக்களைக்குள்
இப்ப புறப்பட வேணுமாம்
என்றேதோ சொல்லி அவர் வேர்த்தார்
அம்மா துடிக்கப் போய்
எல்லாம் சரியாய்ப் போச்சு, எங்கை தான் போறதினி
ஒப்பாரி வைச்சே உரக்கக் குழறுகிறாள்.
அப்பா எதையோ அவசரமாய் 'தங்'கொன்றுள்
அள்ளி அடைக்க
அவ சமையல் அப்படியே
வாழைக்காய், வள்ளிக்கிழங்கு, மிளகாய்
கருளப்பழப் பொரியல் தட்டில் கிடக்க
உள்ளி மணம் தாளிதம் வாயூற உண்ணாமல்
தள்ளிக் கொண்டப்பா
சைகையின் முன் நான் இருக்க
உள்ள சனமெல்லாம் ஊரை விட்டு
ரோட்டெங்கும் வெள்ளம் போல்
ஆளையாள் தள்ளி வெளிக்கிட்டு
அம்மா நடக்க ... ...
அப்பா தள்ளிக்கொண்டு உருட்டவும்
அம்மாவும், அப்பாவும் நானும.

(யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற உகை உளவள நாள் நிகழ்ச்சியில் இடம் பெற்ற கவியரங்கில் அரங்கேற்றப்பட்டது.)

— கல்வயல் வே. குமாரசாமி

## தளிர் பூவாய் மலரட்டுமே

சொட்டும் பனியில் என் குழந்தையோடு
கட்டத் துணியின்றி என் மனைவியுடன்
வீட்டு விலகிய என் உறவுகள் பாசங்கள்
பட்ட துயரங்கள் போதும் அம்மம்மா.

மரநிழல் தான் எமதில்ல மாளிகை
மரவேரே எம் படுக்கை மஞ்சம்
மரத்தடிகள் மட்டுமல்ல; சாயாவிழு
மதில் கரைகள் எமது தங்கும் உடைமை.

ஓடியோடி நாம் சேர்தெடுத்த
ஓராயிரம் பல சொத்துக்கள்
ஒரு நொடியில் விட்டு வந்தேன்
ஓவென்று அழுகிறதம்மா நெஞ்சம்

பாடு பட்டுக் கட்டிய புது இல்லம்
பார்த்திருக்க குண்டொன்றில்
பட்டென்று இடிந்து சிதறி விழ
பார்த் தழுதேன பல நாட்கள்.

பட்டு வகைகளும் பலரக துணிகளும்
தொட்டவள் மகிழ்வென அவள்
கேட்டதும் பரிசளித்தேன் அது
எட்டவே சென்றதோ எரி உண்டதோ

கட்டிய மனைவி கருவோ நிறைமாதம்
பட்டினியும் தாகமுமாய் எட்டி நடப்பாளோ
'இனி ஏலாதென்று' இருந்தழுதாள் - என் செய்வேன்
பனிஇருளில் நாம நடந்த நாள்,

புதுமலரை ரசிக்க புண்ணியங்கள் செய்யவில்லை
மதுமலரே அவள் ஈன்றெடுத்த எம் மகவு
புதுநகை செய்ததோ புன்னகை செய்ததோ
புசிக்கவே ஓர்மாண் துண்டுதான் தேடும்.

காய்ச்சல் ஒருபுறம் வயிற்றோட்டம் மறுபுறமும்
ஓய்ச்சலில்லாமல் ஓயாமல் கடி சிரங்கு
'பாய்ச்சல்' வருமென யுத்தப் பயமொருபுறமும்
கூச்சல் போட்டுக் கூவினால் யார்கேட்பார்

பட்ட துயரங்கள் பாரினில் போதுமையா
கெட்ட காலங்கள் கெதியில் அழியட்டுமே.
பட்டுப் போன எம்வாழ்வ மலர்கள்
தொட்டுத் தளிர் பூவாய் மலரட்டுமே.

— ஜே. பிரேம்ஜி

### தராசு

சங்கக் கடையில்
சாமான் நிறுக்கையில்
கொஞ்சம் குறையுதென்று
கிள்ளிப் போட்டு
அள்ளி எடுத்தார்.

—வீனு

### முதல் மனிதன்

குச்சு வீட்டில்
குடியிருந்த குஞ்சன்
மச்சு வீட்டு வாசியானது
மர்மம் தான் யாதோ?
விசாயம் திருப்பிய
முதல் மனிதனாம்.

### ரணம்

எங்கும் டெய்யும்
எரிமலையால்
தேசத்திற்கு ரணம்.
தேசத்தின் மக்களுக்கோ
நிவாரணம்

- மது

### அகதி

பலாலி பயிலிட்டி
பகுதிகளிலிருந்து
இடம் பெயர்ந்த
நாங்களும் முகாமில்...
நாங்கள் பெற்றெடுத்த
பிள்ளைகளும்
பெர்ன் நகர முகாமில்...

### சிரிக் அவுட்

கிரிக்கட் போட்டிக்கு
கல்லூரிக் கொடிகளுடன்
கோசமிட்டு வந்தோர்
சென்றிப் பொயின்றில்
பேனை ஊர்வலம்.

### தரகர்

இரண்டு டென்னைப்
பெற்ற நான்
தரகரிடம் சென்றால்
அவர் தன்
ஐந்து டென்ணுக்கு
ரென் தேடுகிறாராம்.

- மது

## காணாத நண்பன்

ஒரு மாலையில்
அல்லது நண்பகலில்
எந்த வேளையிலும் உன்
இரவுகள் தொலைந்து
போயிருக்கலாம்
சிறிய இடுக்குகள் கூட
உனது வெளிச்சத்தினை
மறைத்திருக்கும்
தலை நரையில்
மறைந்திருக்கும்
வேதனைக் கீறல்கள்
பதில் சொல்லாமல்
போய்க் கொண்டிருக்கும்
உனது காலம்...
அவர்களது சுவாச வேகம்
அதிகரிக்க, உனது
சுவாசம் நின்று
போயிருக்கும
அல்லது
அடங்கிப் போயிருக்கும்-
இறுதியாய் உன்
நினைவுகளின் வடிவத்தில்
யார் வந்தார்கள்?
வேதனைகளின் விளிம்புகளில்
நினைவுகள் உன்னை
சுட்டெரித்திருக்கும்
ஒரு புதிய மனித இனம்
இன்னும் மண்ணில் கண்டு
பிடிக்கப்படவில்லை.
இனிய நண்பனே,
இழந்த நாட்களை இனி
எண்ண வேண்டாம்
என்று
உனது அன்னையிடம்
சொல்லவா?

## நடப்பியல்

நடப்பியல் பற்றி நீ
என்ன கருதுகின்றாய்?
நான் பொதுவாக
உணர்வுகளை
கற்பழிக்கின்றேன்
கற்பு என்பது வெறும்
அபிஷேகப் பொருளல்லவே
உணர்வுகளுக்கு ஆடைகட்டி
அழகு பார்த்தது
உங்கள்
தவறன்றி
என் தவறல்ல
மேகம் மூடிய வானத்தில்
விண்மீன்களின் விதைப்பை
நீ கண்டாயா?
சிறை என்பது
உடலுக்குத்தான்
உணர்வுகளுக்கல்லவே
துணிவன் சத்துருவை
வெல்வதில்
எண்ணங்களின் வியாபிப்பை
நெறிபடுத்துங்கள்
இனி, நடப்பியல் பற்றி
நீயென்ன கருதப்
போகின்றாய்?

இ. கோகுலராகவன்

# இவ்வார சிறுகதை

# செம்மறி ஆடுகள்

மேசி

கோகிலாவின் மனம் இனம் புரியாத பயத்தால் படபடத் துக்கொண்டிருந்தது.

இரண்டரை ஆண்டுகளாக இரவுபகல் பாராமல் கற்ற கல்விக்குகிடைத்த பலாபலன்.

இன்று கோகிலா பல்கலைக் கழகத்துள் காலடி பதிக்கும் பொன்னான நாள்.

இந்த இனிய நாளில் மகிழ்ச் சியை அச்சம் விஞ்சி நிற் பதை கோகிலா உணர்கி றாள்.

'செக்' ஆங்கில வகுப்புக் களில் பட்ட சித்திரவதைகள் தொடரத்தெம்ப பகிடிவதை தொடரப்போகிறது. நினைக் கவே அடிவயிறு வீசைகிறது.

கோகிலா தன் நண்பி மாலதியுடன் பல்கலைக்கழ கத்துள் நுழைகின்றாள்.

நெடிதுயர்ந்து, நிழல்பரப்பி வானளாவி நிற்கும் வரிசை

சேட்ட டநிய சொல்! அவள் வாழ்நாளில் இதுவரை சேட்டறியாத சொல். ஆனால் சொன்ன விதத்திலிருந்து சொல்லத்தகாத சொல் என்று புலனாக கோகிலா காதைப் பொத்திக்கொண்டு அழத் தொடங்குகின்றாள்.

இவளை ஒரு மூத்த மாண வனாக என்ன ஒரு மனிதனா கவே கோகிலா தன் வாழ் நாளில் மதிக்க மாட்டாள்.

அவளது மதிப்பைப்பற்றி அவனுக்கென்ன? ஒரு காலத் தில் அவளது அண்ணன் முன் கனிக்குறுகி நின்றவன் தான் இந்த சத்தியன். ஆனால் இன்று – ?

'டேய், சேர் வந்தால் கஷ் டம், விட்டுப்பிடிப்பம், போங் கோடி'

அனுபவஸ்தன் ஒருவனின் கருத்து இது.

விரிவுரையாளரின் பேச்சுகை கட்டளை எக்கு கீழ்ப்படி கின்றது.

டன் 'சொல்லிக் கொடுத்தா என்ன நடக்கும் தெரியுமே?' என்று ஒருவன் மிரட்டியது கூடவே நினைவுக்கு வருகின் றது.

ஒரு காலத்தில் சத்தியன் தன்னை சுத்திச் சுத்தி கதைத் ததைப்பற்றி, காதல் கடிதம் எழுதியதுபற்றி தன் அண்ண னிடம் கூறி அவனுக்கு போதிய சூடு வாங்கிக்கொடுத் தவள் தான், ஆனால் இன்று அவள் செய்யும் இந்த சித்திர வதைகளை எதிர்த்து நிற்க ஏன் முடியவில்லை.

கூட்டம் நிறைவுற்று விரி வுரையாளர்கள் வெளியேறி

அன்று சத்தியனை காட் டிக் கொடுத்த துணிச்சல் இன்று எங்கே போனது?

'எல்லோரும் இனி 'பாட்டா' தான் போட

வேண்டும் தோட்டைத் தவிர ஒரு ஆபரணமும், ஏன் மணிக் கூடு கூட கட்டக் கூடாது. இரட்டைப் பின்னல் பின்ன வேண்டும். சைக்கிளை உருட் டிக்கொண்டு வர வேண் டும் –'

கட்டளைகள் வரையறை யற்று பிறப்பிக்கப்படுகின்றன

'இந்த கட்டளைகளுக்கு கீழ்ப்படியாதவருக்கும் எங்க ளுக்கும் எந்த உறவும் இல்லை. பல்கலைக்கழக நிகழ்வுகளில் பங்குபற்றவோ பார்வை யிடவோ அனுமதியில்லை'

'நாங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்ள வும், கீழ்படிதல், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப் பாங்கு, பெரியவர்களை மதித் தல் முதலாய நல்ல குணங் களை வளர்க்கவே பகிடி வதையை முன்னெடுத்துச் செல்கின்றோம்'.

பொட்டு வைக்காமல், 'பாட்டா' போட்டுக் கொண்டு சைக்கிளை உருட்டினால்

இங்' நேரம் கவனிக்க வேண் டும்.

இப்ப வெளியிலை கண்ட படி திரிந்து 'பம்பல்' அடிக்கி றது கஷ்டம், 'ராக்கிங்' நேரம் பம்பலாய்ப் பொழுது போகும்.

றோட்டிலை போற பெட் டையளோடை கண்டபடி கதைத்தால் பல்லைக் கழட்டி கையிலை தருவானவை. 'ராக் கிங்' நேரம் எண்டாக் கண்ட படி கதைக்கலாம்.

'பகிடி வதையின் உபயோ கங்கள்' என்ற தலைப்பில் ஒரு பட்டியலே போடலாம்' என்று வாசுகி அக்கா ராக்கிங்கை பற்றி தன் அபிப்பிராயத்தை கூறியது கோகிலாவின் நினை வில் மின்னி மறைக்கிறது.

சுளீர் என்று ஒரு உண்மை அப்போது தான் உறைக்கிறது.

அவளுடைய அண்ணன் சத் தியனுக்குக் கொடுத்த அடிக் குக் கிடைத்த பதிலடிதான் சத்தியனின் இந்தப் பேச்சும், ஏச்சும்.

'என்ன' கோகிலா கடுமை யான சிந்தனை' மாலதியின் கேள்வி கோகிலாவின் சிந்த னைக்கு கடிவாளமிடுகின்றது'

''எல்லாம் இந்த 'ராக்கிங் பற்றித் தான், புதிய ஒரு இனிய உலகத்துள் நுழைவது போன்ற பிரமிப்புடன் வாற எங்களை ஏன் இவர்கள் இப் படி கஷ்டப்படுத்துகிறார்கள். எங்களுக்கு இங்குள்ள பாட நெறிகள், பரீட்சை அமைப் புக்கள், கட்டிடங்கள், நூல் நிலையம், மருத்துவ வசதிகள், விளையாட்டுகள் என்று எத் தனை விடயங்கள் பற்றி தெளி வான விளக்கங்கள் இல்லா மல் இருக்கு. இப்படியான நல்ல விடயங்கள் பற்றி சொல் லித் தந்து உதவி செய்தால்

“ சுயமாக சிந்தித்து செயற்படக் கூடாதா? வருங்கால பட்டதாரிகள். பல உன்னதமான புனிதமான பதவிகளை வகிக் கப் போகின்ற பாரிய பணிகளை முன் னெடுத்துச் செல்லப் போகின்ற சிந்தனைச் சிற்பிகள் செம்மறி ஆடுகள் போல... ”



... மரங்கள், மரத்திற்கடி யில் மாணவ மாணவியர் கூட்டம்.

'இங்க வாங்கோடி'

ஒரு மாணவர் கூட்டம் இவர்களை வழிமறிக்கிறது.

'சைக்கிளை உருட்டிக் கொண்டுதான் போகவேண் டும் என்று தெரியாதே? விட்ட பிழைக்கு நூறுதரம் இருந்து எழும்புங்கோ'

'இது என்ன' சென்றி போயின்டே 'சைக்கிளை உருட்டிக்கொண்டு போக, கோகிலாவின் மனதில் எழுந்த கேள்வி இருந்து எழும்பி இருந்து எழும்பி வாங்கிய ...டன் பெருமூச்சாக வெளி யேறுகின்றது.

'சரி, சரி இனியும் விட்டாக் பிறகு பிரகாஷ் வாரம் போல கோகிலா வாரம் கொண் டாட வேண்டி வந்திடும்'

குரல் வந்த திசைக்கு கோகி லாவின் கண்கள் திரும்புகின் றன.

சத்தியன். !

இன்னும் தனக்கு மூத்த மாணவன் என்ற எண்ணம் இதுவரை அவள் நினைவிற்கு எட்டவில்லையே!

'என்னைக் காய் போடு றியா!'

சத்தியன் பக்கத்தில் நிற்க இந்தக் கேள்வி. கோகிலா தலையைக் குனிகின்றாள்.

'ஏன் உன்ரை வடிவுக்கு நான் போதாதோ? போடி—'

பல்கலைக்கழகத்துள் காலடி பதித்து முதன் முதலில்

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்ற நிலையில் மண்டபத்துள் நுழைகி றார்கள்.

புதிய மாணவர்களுக்கான பாட விளக்கங்கள், அறிவுரை கள் அறிவுறுத்தல்கள் வழங் கப்படுகின்றன.

'உங்களுக்கு என்ன பிரச் சனை வந்தாலும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் நாங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்போம்'

யதுதான் தாமதம் 'சீனியஸ்' எலியைப் பிடிக்கச் செல்லும் பூனையின் வேகத்துடன் உள்ளே நுழைகிறார்கள்.

'கழட்டடி பொட்டை! பொட்டு வைக்கக் கூடா தென்று தெரியாதா?'

'பொட்டு வைப்பது தமிழ ரின் பண்பாடு. இதை ஏன் கழற்ற வேண்டும்?' மனம் எதிர்க்கேள்வி கேட்டாலும்

இந்த நல்ல குணங்கள் வள ருமா? ஆச்சரியமான உண்மை!

'வாடா, இப்ப தான் பார்த் துப் பழகிப் காய் போடலாம்'

ஒரு மூத்த மாணவன் கூறிச் செல்கின்றான். 'என்ன வடி வான பெட்டை, வசதியான குடும்பம். இரண்டு அண்ண மார் வெளிநாட்டிலை. இவளை காய் போட்டால் என்ன? 'ராக்கிங்' நேரம் முயற்சித்துப் பார்ப்போம்'

இவளுக்கு சரியான தலைக் கனம். 'ராக்கிங்' நேரம் கவ னிக்க வேணும்.

'பெடியங்கள் என்றால் குழப்படி செய்வாங்கள் தானே. அதுக்கு இப்படியே ஒரு வாத்தியார் தண்டிக்கிறது. மகன் 'கம்பசுக்கு' வரட்டும. 'ராக்கிங்' நேரம் கவனிக்க வேண்டும்".

'கண்டபடி லெக்சஸ்' கட் அடிச்சு நிறைய நோட்ஸ் எழு தக் கிடக்கு ராக்கிங் நேரம் எழுதக் குடுக்கலாம்.

'இவனின்ரை' அப்ப னோடை எங்கடை மாமன் பிறவிப்பகை. இவனை 'ராக்

என்ன? அதை விட்டுட்டு—. கோகிலாவின் அங்கலாய்ப்பு இது.

அவர்கள் முன்பு அவர்களின் சீனியசிட்டை வாங்கினதை இப்ப எங்களுக்கு தருகின்றார் கள்'

இது மாலதியின் கணிப்பு, அவர்கள் வாங்கினால் அதை எங்களுக்கே திருப்பித் தாறது. தாங்களாவது சுய மாக சிந்தித்து செயற்படக் கூடாதா? வருங்கால பட்ட தாரிகள், பல உன்னதமான புனிதமான பதவிகளை வகிக் கப் போகின்ற, பாரிய பணி களை முன்னெடுத்துச் செல்லப் போகின்ற சிந்தனைச் சிற்பி கள். செம்மறி ஆடுகள் போல அவர்கள் செய்தார்கள் நாங் களும் செய்யிறம் என்று சொல் வதா?'

தங்களின் உரையாடலின் ஓசையையும் மீறி ஒலிக்கும், சக, புதுமுக மாணவர் இரு வரின் உரையாடலைக் கேட்டு மாலதியும் கோகிலாவும் பிர மிக்கின்றார்கள்.

'டேய், இந்த முறை இவங் களிட்டை வாங்கினதின்டை இரண்டு மடங்க, அடுத்த முறை வாறதுகளுக்கு குடுத் தாத்தான் எனக்கு திருப்தி'. □

எழுத்தாளர் அகிலனின்

## நெஞ்சின் அலைகள்

எழுத்தாளர் அகிலனின் நெஞ்சின் அலைகள் தொடர் கதை இந்திய தொலைக் காட்சியின் தமிழ் ஒன்று அலை வரிசையில் வார வாரம் ஒளி பரப்பப்படுகின்றது. இந் திய சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்றதாக இக்கதை சொல்லப்படுகிறது. பிரித்தானிய ஆயுதபடை யில் பணிபுரியும் தமிழர்கள் ரங்கூனில் படும் கஷ்டங் களை இத்தொடர் நெஞ்சத்தை தொடும் அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. 1947ம் ஆண்டை கண்முன் கொண்டு வரும் அற்புதமான காட்சி அமைப்புகள். அந்தக் காலத்தில் உபயோகிக்கப் பட்ட அத்தனை பழைய பொருட்களை சிறந்த ஒளிப்பதிவால் மிளிரச் செய்கி றார் படப்பிடிப்பாளர்.

அகிலனின் மகன் கண்ணன் இத்தொடரின் திரைக்கதை வசனத்தை எழுதியிருக்கிறார். தந்தையின் எழுத்தாற் றலை கொஞ்சமேனும் சிதைவுபடாமல் தனையன் சின்னத் திரையில் சித்திர வடித்திருக்கிறார். ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இத்தொடர் ஒளி பரப்பப்படுகின்றது.

அகிலனின் நெஞ்சின் அலைகள் கதையை படித்தவர் களும்- படிக்காதவர்களும் சின்னத் திரையில் பார்ப்ப தற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, அந்த வள வில் அகிலனின் மகன் கண்ணனை பாராட்ட வேண்டும.

# வைகறைக்கதிர்

## கோழிக் குஞ்சாரே!

சொட்டுக் குஞ்சுக் காலாலே
சுறுக்காய் ஓடிப் போகின்றீர்
செட்டை விரித்துச் சிறு தூரம்
சிறகை அடித்தும் பறக்கின்றீர்.

உழுந்து போலக் கண்ணாலே
ஓடிப்போய் எதைப் பார்க்கின்றீர்
விழுந்த தினைப் பொறுக்காதீர்
வெள்ளைக் கோழிக் குஞ்சாரே!

அரிசிக் குறுணல் நான் தாறேன்
அள்ளி வந்து போடுகிறேன்
சேற்றைக் கிண்டப் போகாதே
சோக்குப் பஞ்சுக் குஞ்சாரே.

## வீடு கட்டாத வாழ்க்கை ..?

கழுகு இனத்தைச் சேர்ந்த ராஜாளிக்கும், பருந்துக்கும் சரிவர கூடு கட்டத் தெரியாது. இதனால் இவை மலைப் பொந்துகள், இடுக்குகள் போன்ற இடங்களை கூடு போல பயன்படுத்தி முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. ஆனால் நம்ம ஊர் குயில் என்ன செய்கிறது தெரியுமா? காகத்தின் கூட்டுக்குள் முட்டையிடுவதோடு சரி அடைகாத்து-குஞ்சுபொரித்து-வளர்ப்பதெல்லாம் காகம்தான்.

# ஏமாந்த முதலை

— உருவகக் கதை

குள்ளநரி ஒன்று உணவுக்காக காட்டில் அலைந்து திரிந்து கடும் பசியுடன் ஒரு ஆற்றங்கரைக்கு வந்தது. ஆற்றங்கரைக்கு அக்கரையில் ஒரு காட்டுமாடு செத்துக் கிடப்பதை பார்த்த நரியின் வாயில் நீர் ஊறியது. அக்கரைக்கு எப்படிப்போய் அந்த மாட்டை சாப்பிடுவது என்று யோசிக்கலானது.

அந்த நேரத்தில், அந்த ஆற்றில் வாழ்ந்து வரும் முதலை ஒன்று அவ்விடத்திற்கு வந்து என்ன நரியாரே! ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர். என்று கேட்டு தண்ணிருக்குள் இருந்து எட்டிப் பார்த்தது.

இதை சற்றும் எதிர்பார்க்காத நரி தனது யோசனைக்கு தீனி கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சியடைந்து —

'இல்லக்காணும் முதலையாரே; நான் அக்கரை போக வேண்டும். அது தான் எப்படி போவது என்று யோசிக்கிறேன். அங்கே ஒரு கல்யாண வீடு. நீ மனம் வைத்தால் நான் போகலாம்' என்று நரி சொன்னது.

நான் என்ன உதவி செய்ய வேண்டும் என முதலை கேட்டது. பழம் நழுவி பாலில் வீழ்ந்தது என்று நினைத்தநரி, உனது முதுகில் என்னை ஏற்றி அக்கரையில் விட வேண்டும். நான் கல்யாண வீட்டுக்கு போய் வரும் போது தனிமையில் இருக்கும் உனக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வருகின்றேன் என்றது.

முதலையும் மறு பேச்சின்றி நரியை தனது முதுகில் சுமந்து அக்கரையில் விட்டு காத்திருந்தது. முதலையாருக்கும் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. நரியார் திரும்பி வரும் போது என்ன செய்தி கொண்டு வருவார் என்று ஆவலுடன்

**ஜெயா மாமா**

தனது வாலை தண்ணிரில் அடித்தது.

காலையில் இருந்து மாலை வரை தனது இஷ்டம் போல் காட்டு மாட்டை நரி சாப்பிட்டு ருசி பார்த்தது. மிகுதியை நாளை சாப்பிடலாம். அதிகம் சாப்பிட்டால் செரிக்காது. முதலையாரும் எனக்காக காத்திருப்பார் என நினைத்த நரி விரைந்து ஓடியது.

முதலை காத்திருக்கும் இடத்திற்கு வந்த நரி ஒரு ஏப்பம் விட்டது. என்ன நரியாரே; கல்யாண வீட்டு சாப்பாடு அமர்க்களம் போல் தெரிகிறது. முதலை ஆவலுடன் விசாரித்தது.

ஓமோம்; சாப்பாடென்றால் அந்த மாதிரி சாப்பாடு. என் வாழ் நாளில் இப்படி ஒரு விருந்தை நான் சாப்பிட்டதில்லை என்று நரி மீண்டும் ஒரு ஏப்பம் விட்டது.

முதலை நரியை சுமந்து வந்து பத்திரமாக கரையில் இறங்கியது, என்ன நரியாரே; திரும்பி வரும் போது ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்வதாக சொன்னீரே, அது என்ன வென்று ஆவலுடன் முதலை கேட்டது. காட்டு மாட்டை மூக்குமுட்ட பிடித்த நரிக்கு தான் சொன்னதை மறந்தே விட்டது.

நாளை வந்து சொல்கிறேன் ஆயத்தமாக இரு என்று சமாளித்து விட்டு நரி சென்றது. இப்படியாக நாளை சொல்கிறேன் நாளை சொல்கிறேன் என்று சொல்லி முதலை மீது சவாரி செய்து அக்கரையில் செத்துக் கிடக்கும் காட்டு மாட்டை கபளீகரம் செய்தது அப்பாவி முதலை இந்த குள்ளநரியின் கபட நாடகத்தை நம்பி ஏமாந்தது தான் மிச்சம். கடைசியாக நாளை வந்து கண்டிப்பாக நல்ல செய்தி சொல்கிறேன் என்று சொல்லிச் சென்ற நரி மீண்டும் திரும்பவில்லை.

முதலை கடும் கோபத்துடன் நரியை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து காத்திருந்தது எப்போதாவது ஒரு நாள் நரியார் மாட்டாமலாவிடப்போகிறார் என்று தனக்குள் ஆறுதல் அடைந்து காத்திருந்தது.

இந்தச் சம்பவம் நடந்து பல மாதங்களாகியது. ஒரு நாள் முதலையை ஏமாற்றிய நரி பழையசம்பவங்களை மறந்து மீண்டும் ஆற்றங்கரைக்கு வந்து கொண்டிருந்தது தன்னை ஏமாற்றிய நரி வருவதைக் கண்ட முதலை இன்று எப்படியும் நரியை பிடித்து கொன்றுவிட வேண்டும் என்று தனக்குள் கறுவியது.

நீரிலும் - நிலத்திலும் வாழக்கூடிய முதலையானது ஆற்றில் இருந்து வெளியே வந்து எந்த வித அசைவும் அற்று செத்த மாதிரிநிலத்தில் கிடந்தது.

சற்றுத்தூரத்தில் முதலை ஒன்று அசைவற்று கிடப்பதை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுகதை

- ★ உப்பைத் தின்றவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
- ★ கதையொருவர் சொல்ல அதற்கு நாலு பேர் ஆமாம் சொல்ல பாட்டு வருது, கூட்டம் சேருது அது என்ன?
- ★ உயிரில்லாதவன் ஊர் முழுக்க பறக்கிறான். அவன் யார்?
- ★ அழவைத்தாலும் அவனால் ஆரோக்கியம் அதிகம் அவன் யார்?
- ★ காலில்லாதவன் தண்ணீரில் தாவித்தாவி வருவான். அவன் யார்?
- ★ ஊர் ஊராக அடிபட்டு உரியவரிடம் போய்ச் சேருவான். அவன் யார்?
- ★ காலையில் எழுவான் வாசமில்லா பூச்சூடி வளைய வருவான் அவன் யார்?

**விடைகள்**

1) கடல் 2) விலலுப்பாட்டு 3) பட்டம்
4) வெங்காயம் 5) படகு 6) தபால
7) சேவல

## இன்று ஒரு தகவல்

ஒரு வீட்டில் திருடுவதற்கு திட்டமிட்டிருந்தான் திருடன் ஒருவன் அந்தவீட்டில் வசிக்கும் சிறுவனை கடைத்தெருவில் பார்த்த அந்த திருடன் அச்சிறுவன் அணுகி; நான் உனக்கு சொக்கா வாங்கி தருகின்றேன், அம்மா நகைகளை எங்கே வைத்திருக்கிறா? என்று ஆதரவாக கேட்டான் திருடன்.

முதலில் சொக்கா வாங்கித்தா - அப்புறமா சொல்கிறேன் என்று சிறுவன் பதிலளித்தான்.

திருடனும் ஒரு சொக்கா வாங்கி சிறுவனிடம் கொடுத்தான். எனக்கு ஒண்ணு போதாது. நிறையவேணும் என்று சிறுவன் அடம்பிடித்தான்.

திருடனும் சளைக்கவில்லை, ஒன்றுக்கு பத்தாக வாங்கிக் கொடுத்து அம்மா எங்கே நகையை வைத்திருக்கிறா என்று மீண்டும் கேட்டான்.

திருடன் வாங்கிக் கொடுத்த அத்தனை சொக்கிளேற்றையும் சாப்பிட்டு விட்டு சிறுவன் சொன்னான்;

அம்மா நகைகள் எல்லாவற்றையும் அடைவு கடையில் வைத்திருக்கிறா; என்றானே பார்க்கலாம். திருடன் தேள் கொட்டின மாதிரி துடித்தே போனான்.

## காலைப்பொழுது

கூர் இருள் அகன்றது கூவின கோழி
குருவிகள் எழுந்தன - மறைந்தன விண்மீன்
ஏரியில் தாமரை இன மலர் மலரும்
இறைவன் கோவிலில் மணி ஒலி கேட்கும்
ஊரினில் தொழில்புரி மாந்தர்கள் எழுந்தார்
உயர்மரக் கொம்பு விட்டு ஓடின காக்கை
சேர் கிழக்கெனுந் திசை வெளுத்தது மெல்ல
செங்கதிரவன் உதயஞ் செய்கிறானே.

## வளரும் அரும்புகளுக்கு

காலைக்கதிர் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பகுதியாக 'வைகறைக்கதிர்' வெளிவருகிறது. இப்பகுதிக்கான படைப்புக்கள் பாடசாலை மாணவரிடமிருந்தும், சிறுவர்களின் படைப்பாற்றலை வளர்க்க விரும்புபவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு :
வைகறைக்கதிர், மே/பா காலைக்கதிர்,
த. பெ. எண் 145, யாழ்ப்பாணம்.

# அரங்க நிகழ்வுகள்

## ஒளிக்கு ஒளியாக . . . அரங்கேறிய 'விழிச்சுடர்'

— சிறீரங்கன்

"நல்ல பூதம் வெட்டிசைப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்"

என்ற கந்த சஷ்டி கவசத்தின் சில வரிகள் இசைக்கப் படுவதுடன் நாடகம் ஆரம்பமாகின்றது. பழைய ஜாதகக் கதையைக் கருவாகக் கொண்டமைக்கப்பட்ட இந்த நாடக வடிவத்தினூடாக சமகாலப் பிரச்சனைகளும் வெளிக்கொணரப்படுகின்றன.

காட்டில் வாழும் இரு அரக்கர்கள் ஆற்றலை ஈட காமையால் இரு மோகினிப் பெண்கள் வடிவில் தம்மை உருமாற்றிக் கொண்டு நாட்டினுட் புகுந்து நல்லரசோச்சும் அரசனைப், மக்களைக் குழப்பத்திலாழ்த்தி நிம்மதியைக் குலைக்கிறார்கள். பட்டிகளில் கால்நடைகள் காணாமல் போகின்றன. மக்கள் பட்டினிச் சாவுகளை எதிர்நோக்குகிறார்கள். கால்நடைகளைக் கொன்று உண்ணும் பழியைத் தந்திரமாக அரசியின் மீதும், பத்தினியின் மீதும் போட மன்னன் அவர்களைக் கொலை செய்யும்படி ஆணையிடுகிறான். காவலர்கள் கர்ப்பவதிகளான அப் பெண்களின் கண்களை மட்டும் தோண்டி எடுத்து விட்டு அவர்களை காட்டில் விட்டுவிடுகிறார்கள். காட்டிலே வாழ்ந்து இரட்டையர்களைப் பெற்று வளர்க்கிறார்கள். அவர்கள் வளர்ந்து நாட்டுக்குள் வந்து அந்தச் சூனியக்காரிகளையும் அவளது கூட்டத்தினரையும் அழித்து விட்டு தமது அன்னையரின் விழிகளையும் மீட்டெடுத்து அவர்களுக்குப் பார்வை ஒளி கொடுத்து நாட்டில் அமைதி ஏற்படுத்துகிறார்கள் என்பது கதையாகும்.

நாட்டில் தீயசக்திகளால் திட்டமிட்டுச் சிக்கல்கள் உருவாக்கப்படுவதும், அதற்கான காரணங்கள் இனங்காணப் படாமல் மக்கள் அவலமுறுவதும் அடுத்த பரம்பரையினர் வேகமாகவும் விவேகமாகவும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதும் என்ற கருத்துருவாக்கம் ஏற்படும் வகையில் நாடகம் நன்கு நகர்த்தப்பட்டுள்ளது. நல்லாட்சியின் போது மக்களின் பண்புகளும் தீயவர் சூழ்ச்சியால் அவர்களிடம் ஏற்படும் பண்புமாற்றங்களும் நன்கு வெளிக்காட்டப்பட்ட முறைமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நெறியாள்கை : தே. தேவானந்

நாடகத்தில் இசை நன்கு கதை பேசுகின்றது. ஆரம்பத்தில் பாடும் கந்தசஷ்டி கவசம் நாடகத்திற்கு ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. பல இடங்களில் கதாபாத்திரங்களின் அசைவு, இசையுடன் ஒன்றித்துப் போகின்றன. எனினும் ஆரம்பத்தில் இரு அரக்கர்களின் ஆட்ட முறை மிகப் பொருத்தமானதாக இது அமையவில்லை என்றே கூறவேண்டும்.

உயரமான - குள்ளமான இரு அரக்கர்களும், உருமாறும் போது அப் பெண்களிலும் அதே முறை ஒற்றுமை அமைந்தது மிகப் பொருத்தமானதாக இருந்தது. பெண்ணாக மாறியவர்களில், சிறிய உருவம் ஜான்ட மோகினியின் நடிப்பும், கண் அசைவுகளும், மிகப் பிரமாதமாக அமைந்தது எனலாம், மன்னனின் கம்பீரத்தன்மை மேலும் சிறப்பாக்கப்படலாம்.

ஒளியைப் பயன்படுத்துவதில் போதிய கவனம் காட்டப்படவில்லை. பல இடங்களில் நிழல்கள் உண்டாகின்றன. இரு அரக்கர்களின் ஆட்டங்களின் போதும் வெவ்வேறு நிறங்களில் ஒளியும் அசைந்திருக்குமாயின் மிக நன்றாக இருந்திருக்கும். ஒளிப் பந்தங்கள் - செந்நிறமாகக் கண்ணாடிப் பாத்திரங்களில் கண்கள் ஆகிய பொருட்கள் மேடையில் பயன்படுத்தப் பட்டபோது, அரசன் பொங்கலின்போது வெற்றுப் பானையைப் போட்டுடைப்பது பொருத்தமானதாக இல்லை.

மேடை அமைப்பில் காடும் நாடும் மாறுவதும் நன்கு உருவமைக்கப்பட்டிருந்தது ஒப்பனையும், வேட உடுப்புக்களும், எளிமையான பாத்திரப் படைப்புகளும் பொருத்தமாக அமைந்திருந்தன. நாடகத்தில் எடுத்தாளப்படும் சம்பவங்கள் சமகால நிகழ்வுகளை மனத்தில் பிரதிபலிக்கச் செய்கின்றன. குறிப்பாக மக்களை மந்தைகள்போல நடத்தும் மௌனக் கலாசாரத்தைக் காட்டும் இடமும் நன்கு ரசிக்கத்தக்கதாயிருந்தது.

கருத்துக்கள் பூடகமாக சொல்லப்பட்டாலும், பார்வையாளர்களுக்குப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் நாடகத்தை நெறியாளர் தே. தேவானந்த் நன்கு நகர்த்தியுள்ளார். ஒன்றரை மணித்தியாலமும் தொய்வின்றிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

---

சினிமா விமர்சனம்

## காதலுக்கு மரியாதை

நடிகர் சங்கிலி முருகனின் தயாரிப்பில் - பாசிலின் இயக்கத்தில் உருவாகியிருக்கும் காதலுக்கு மரியாதை இளம் காதலர்களின் உணர்வுகளையும் - அவர்கள் இணைவதற்காக நடாத்தும் போராட்டங்களையும் காட்சிக்கு காட்சி விறு விறுப்பாக இப்படத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் கதையில் புதுமை என்றோ புதியவை என்றோ பெரிதாக சொல்லும் படி ஒன்றுமில்லை. ஒரு குடும்பத்தில் மூன்று கண்டிப்பான அண்ணன்கள் தங்களது ஒரே தங்கை மீது பாசத்தை கொட்டி வளர்க்கிறார்கள். கல்லூரி வரை படிப்பிக்கிறார்கள்.

கல்லூரியில் தங்கையின் காதலை அறிந்து கொதித்தெழுகிறார்கள் காதலனை அடித்து உதைக்கிறார்கள். கடைசியில் மனம் மாறி தங்கையின் காதலனையே அவளுக்கு மணமுடித்து வைக்கிறார்கள். இது தான் கதை, பிரபு - குஷ்பு நடித்த 'சின்னத்தம்பி' படத்தை மீண்டும் நினைவுபடுத்துகிறது. கதாநாயகன் இளம் நடிகர் விஜய். கதாநாயகி குழந்தை நட்சத்திரமாக இருந்து முதல் முதல் கதாநாயகியாக நடிக்கும் படம். நல்ல ஆரம்பம், இளம் காதலர்கள் கட்டிப்புரண்டு காதல் செய்யாமல் எட்ட நின்று காதல் புரிவது வித்தியாசமாக இருக்கிறது. ரசிக்கக் கூடியதாகவும் இருக்கிறது

படம் முழுக்க மலையாள வாடையே வீசுகிறது.

பல வெற்றிப் படங்களை இயக்கிய பாசில் ஒரு சாதாரண காதல் கதையை விறு விறுப்பாக சுவைபட இயக்கியிருக்கிறார். கிளைமாக்ஸ் காட்சியில் அவர் தனது முத்திரையை பதித்திருக்கிறார்.

நீண்ட நாட்களுக்கு பிறகு இளையராஜாவின் இசை, பாடல்கள் கேட்கக் கூடியதாக இருக்கிறது. மொத்தத்தில் ஒரு நல்ல படத்தை பார்த்த மன நிறைவு ஏற்படுகின்றது.

— சோமா —

---

## சினிமா துளிகள்

☐ பொங்கலுக்கு வெளிவந்து வெற்றியை ருசிக்காத படங்களில் விஜயகாந்தின் உளவுத்துறையும் அடக்கம்; கோடிகளைக் கொட்டி எடுக்கப்பட்ட படம் இது. வழமையான பாணியில் அடிதடி சண்டைகள், எத்தனை காலத்திற்குத் தான் இப்படிப்பட்ட படங்களை பார்த்து சலித்துக் கொள்வது. விஜயகாந் கதை திரைக்கதையில் கவனம் செலுத்துவது நல்லது. இல்லாவிட்டால் சினிமாவில் அவர் தலை மறைவாகி விடுவார்.

☐ தமிழ் சினிமாவில் ஒரு காலத்தில் பிரபலமாக ஓடிய பாலச்சந்தரின் 'பாமா விஜயம்' படத்தை மலையாளத்தில் எடுக்கிறார்கள். இந்தப் படத்தில் வரும் நடிகைக்குரிய பாத்திரத்தில் நடிப்பவர் நம்ம அக்கா நக்மா தான். குடும்பங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு நடிகையாக நடிக்கிறார். நடிப்போடு நிறுத்திக் கொண்டால் சரி. பாவம் சரத்குமாரின் மனைவி நக்மாவால் படாதபாடுபடுகின்றார்.

☐ தமிழ் திரையுலகில் நீண்ட நாளாக எதிர்பார்க்கப்படும் திருமணங்கள் இரண்டு. ஆர். கே. செல்வமணி - ரோஜா திருமணம் எப்போது நடக்குமோ தெரியவில்லை. ஆனால் அதற்கு முன்னதாக - இந்த வருடத்திலேயே இயக்குனர் சுந்தர்சி - குஷ்பு திருமணம் நடந்துவிடும் எனத் தெரிகிறது. இதற்காக கவுண்டமணி வீட்டுக்கு பக்கத்தில் ஒரு ப்ளாட்டை இருவரும் வாடகைக்கு பிடித்திருக்கிறார்கள். தமாசு மணி எட்டிப்பார்க்காமல் இருந்தால் சரி.

### ஜுராசிக் 'தேள'

டைனோசர் என்ற ராட்சத மிருகத்தை வைத்து எடுக்கப்பட்ட 'ஜுராசிக் பார்க்' என்ற ஆங்கிலப்படம் வசூலில் சக்கை போடு போட்டது அல்லவா? இப்போது அதே மாதிரி தமிழில் ஒரு படம் தயாரிக்கப்படுகிறது. ராட்சத தேள் தான் கதாநாயகன். பூமிக்கடியில் இருந்து பூதம் போல் வெளிவரும் இந்த ராட்சத தேளுக்கு குழந்தைகள் என்றால் குஷி. மற்றவர்களைக் கண்டாலோ இடுக்கியால் 'கட்' செய்து துண்டாக்கிவிடும். யாராலும் வெல்ல முடியாத இதை கதாநாயகன் ராணுவ உதவியுடன் எப்படி அழிக்கிறான் என்பது தான் கதை.

ராட்சதத் 'தேள்' சென்னை அண்ணா மேம்பாலத்தில் நடந்து வரும்போது பாலமே இடிந்து விழுகிற மாதிரியும், அது திரும்பும்போது அதன் வால் மோதி எல். ஐ. சி கட்டிடம் உடைந்து சிதறுகிற மாதிரியும் பல 'திரில்' காட்சிகள் 'கம்பியூட்டர் கிராபிக்ஸ்' மூலம் படமாக்கப்பட இருக்கிறதாம். கிராபிக்ஸ் செலவு மட்டுமே ரூ 3 கோடியை தாண்டும் என்றால், படத்திற்கான மொத்த செலவை கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள். படத்தை தயாரிக்கப் போகின்றவர் யார் தெரியுமா! காதல் கோட்டை பாண்டியன்.

குஞ்சுமோனின் ரட்சகன் போல ராட்சத் 'தேள்' ஊத்திக்காம இருந்தால் சரி.

---

## புதிய 'சாசனம்' எழுகிறார் இயக்குனர் மகேந்திரன்

தமிழ் சினிமாவில் பல வெற்றிப்படங்களை தந்த இயக்குனர் மகேந்திரன் மீண்டும் 'சாசனம்' என்னும் திரைப்படத்தின் மூலம் சாதனை படைக்க வந்திருக்கிறார். இவர் நாடகத்தில் இருந்து திரைப்படத்திற்கு வந்தவர், பல படங்களுக்கு திரைக்கதை வசனம் எழுதி சினிமாவுக்கு அறிமுகமானவர். சிவாஜியின் தங்கப்பதக்கம் படத்தின் சிருஷ்டியும் இவர் தான். முதலில் நாடகமாக எழுதி மேடையேற்றப்பட்டு பின்பு சிவாஜியின் தயாரிப்பில் திரைப்படமாக வெளிவந்தது.

உதிரிப்பூக்கள், பூட்டாதபூட்டு, மெட்டி, முள்ளும் மலரும், ஜானி இவைகள் இவர் இயக்கிய திரைப்படங்கள், இவற்றில் முள்ளும் மலரும், ஜானியும் ரஜனி நடித்து வெளிவந்த வெற்றிப்படங்கள்.

இப்போது N.F.D.C என்னும் அரச நிறுவனத்திற்காக 'சாசனம்' என்னும் திரைப் படத்தை மூன்று பகுதிகளாக இயக்க திட்டமிட்டிருக்கிறார். இப்படத்தின் முதல் பகுதியில் அரவிந்தசாமி கவுதமி, ரஞ்சிதா ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

சினிமா தயாரிப்பில் பல கோடிகளை விழுங்கும் இன்றைய காலத்தில் இவர் 34 லட்சம் ரூபா செலவில் படம் எடுத்திருக்கிறார் என்றால் ஆச்சரியப்படத்தான் வேண்டும், குறைந்த செலவில் நிறைவைத் தர முயற்சிக்கிறார், பாராட்டியே ஆக வேண்டும்.

இந்த படத்தில் பல முன்னணி நடிகர்கள் வலியச்சென்று நடிப்பதற்கு சந்தர்ப்பம் கேட்டும் இயக்குனர் மறுத்து விட்டார். 28 நாட்களில் படத்தை எடுத்து முடித்திருக்கிறார் என்றால் பாருங்களேன்

இயக்குனர் பற்றி சுருக்கமாக சொல்வதென்றால், ஒரு பழைய வைரம் இதோ மறுபடியும் பளபளக்க வருகிறது.

# உங்கள் இராசி வாரபலன்

## 03 - 04 - 1998 முதல் 09 - 04 - 1998 வரை

**சோதிடர் V. A. சிவராசா**
வேலணை

ஒன்பது கிரகநாயகர்களும் உங்கள் தலை விதியினை நிர்ணயம செய்கின்றனர் என்பதைக் கூறுவதே சோதிடம்.

திருக்கணித பஞ்சாங்கப்படி சனீஸ்வரன் 18 - 4 - 98 லும் வாக்கியத்தின் படி 25 - 6 - 98 லும் மேடராசிக்கு செல்கின்றார். வியாழன் 8 - 1 - 98 தொடக்கம் 25 - 5 - 98 வரை கும்பராசியிலும்; 25 - 5 - 98 தொடக்கம் 11 - 9 - 98 வரை மீன இராசியிலும்; 11 - 9- 98 தொடக்கம் 12 - 1 99 வரை மீண்டும் கும்பராசியிலும் தங்கியிருந்து பலாபலன்களைப் புரிவார். இராகு - கேது 13 - 1 - 99 வரை உங்கள் இராசிகளில் நிற்கும் கோசர நிலைக்கேற்ப பலன்களைப் புரிந்து கொண்டிருப்பார். செவ்வாய், வெள்ளி. புதன், ஆகிய கிரகங்களும் குறுகிய கால மாற்றங்களுக்கேற்ப தத் தமது கோசர பலன்களைப் புரிவர்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

சனீஸ்வரன் 12-ம் இடத்திலும், குருபகவான் 11-ம் நிலையிலும், இராகு கேது முறையே 5-ம, 11-ம் கோசரத்திலும் நிற்கின்ற உங்களுக்கு சகோதரர், பிதா மற்றும் நண்பர் ஒருவர் மூலம் எதிர்பாராத விதத்தில் உதவி கிட்டுவதின் மூலம் உயர்ச்சிக்கு இடமுண்டு. இதுவரை பிடித்தாட்டி வந்த நோய் குணமடையும். வெளியூர் பயணத்திற்கான செய்தி கிடைக்கலாம். வங்கித் தொடர்பு பணமில்லாமையால் அற்றுப் போகலாம். இழுபட்ட திருமணம் இனிது நிறைவேறலாம். புத்திரபாக்கியம் ஏற்படவும் பலன் உண்டு. மலை போல வருகின்ற சோதனைகள் பனிபோல நீங்கி விடும். புதிதாக வாகன யோகங் கிட்டும், ஏழரைச்சனி நடக்கின்ற படியினால் இடைக்கிடையே கவலைகள் வாட்டும், பெற்றோரில் ஒருவரை இழக்க அல்லது பிரிய நேரிடலாம். தெய்வ நம்பிக்கையைக் கைவிடாதீர்.

### இடபம்

(கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் பாதங்கள்)

வியாழபகவான் 10-ம் இடத்திலும் சனீஸ்வரன் 11-ம் நிலையிலும் இராகு - கேது முறையே 4ஆம் 10ஆம் ஸ்தானத்திலும் உலாவி வருகின்றமையினால் சோதனைகள் வேதனைகளைச் சந்தித்த வண்ணமே வாழ்க்கை அமையும். சிலருக்கு திடீரென இடமாற்றம் ஏற்படலாம். பண முடையினால் கை கூட இருக்கும் திருமணம் முறிவடையலாம். சகோதரர், மத்தியில் சச்சரவும், உறவில் விரிசலும் ஏற்பட இடமுண்டு. கண்ணுக்கு வருந்துயர் கண்ணின் புருவத்துடன் போய் விடும். சமுகத்தில் பெண்கள் தொடர்பால் அவமானமும், தலை குனிவும் ஏற்படும். நெஞ்சுடன் தொடர்பான நோய்களில் மிகக் கூடிய கவனம் எடுக்கவும் ஆண்டவனை மறந்தாலும் பிரயாணத்தின் போது அடையாள அட்டையை எடுத்துச் செல்ல மறக்கவே வேண்டாம் புதிய வியாபார முயற்சி நண்பர் சேர்க்கையால் ஆரம்பிக்கலாம்,

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

உங்களுக்கு சனீஸ்வரன் 10 ம் இடத்திலும் வியாழ பகவான் 9 ம் இடம்; மற்றும் சர்ப்பக்கிரகங்களான இராகு - கேது முறையே 3 லும் 9 லும் கோசர ரீதியில் இருப்பதினால் நன்மைப்பலன்கள் பெருமளவு இடம் பெறலாம், வசதி, உதவி உள்ளவர்கள் வெளிநாடு செல்வதற்கு தயாராகலாம். அரசுத்துறையில் எதிர் பாராதபடி உத்தியோகம் கிட்டும் கன்னியர் பூப்படைவர். புதிய நேசிதரால் இலரின் வாழ்வு ஒளிமயமாகும். காதலால் பெற்றோருடன் மனத்தாங்கல் ஏற்படும். மதமாற்றமும் ஏற்பட இடமுண்டு. புதிய துறைகளில் நம்பி இறங்கினால் வெற்றி நிச்சயமுண்டு. அசட்டுத்துணிவுடன் வாகனங்களை செலுத்தி விபத்தும் நேரிடலாம், ஆலயத்திருப்பணிகளில் பங்கு கொள்ளும் பதவி தேடி வரும், உத்தியோக உயர்வும் கிட்டுவதுடன் புத்திரர்கள் பற்றி வாட்டிய கவலையும் நீங்கும்;

### கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

சனீஸ்வரன், கோசர ரீதியில் 9 லும் வியாழன் அஷ்டமத்திலும் இராகு - கேது முறையே 2,8 லும் நிற்பதினால் கிரகப்பிரீதிகள் செய்வதன் மூலம் தலைக்கு வருகின்ற ஆபத்துக்கள் தலைப் பாகையுடன் சென்று விடுவது நிச்சயம்.

புதிய முயற்சிகளில் பிரவேசிக்கும் போது உங்கள் ஜாதகத்தில் மகாதெசாபுத்திகள் நன்கு இருந்தால் மட்டுமே நம்பி இறங்குங்கள், ஈடுபட்டிருக்கும் விடயங்கள் தொடர்ந்தும் இழுபடும் நிலையே காணப்படும். வெள்ளைப் பூரான் கடி பற்றி கவனமெடுக்கவும். வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருப்போர் எதிர்பாராது மீண்டும் தாயகம் திரும்பலாம். இருட்டும் வேளையில் வீதியில் பயணிப்பதை இயன்றவரை கைவிடவும். மேலதிகாரிகளுடன் சுமுகமான உறவைப் பேணாவிடின் பின்னர் மனம் வருந்த வேண்டியேற்படும். பெற்றோரின் நோயை உதாசீனம் செய்ய வேண்டாம். நோயினால் தேக நலக்கேடுண்டு. விஷபயம் கவனம்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1)

அஷ்டமத்துச் சனீஸ்வரன் உங்கள் இராசியில் நடம் புரிவதினால் நீர்த்தத்து தீவிபத்து, ஜலகண்டம், சிறைப்பயம் பற்றி முன் கூட்டியே எச்சரிக்கையாக இருக்கவும் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை 18.4.98 வரை ஒத்தி வையுங்கள் சீட்டுக்கட்ட, வெளியூர் பயணம் செய்ய, வாகனம் எடுக்க, திருமணம் செய்ய, பிறருக்கு கடன் கொடுக்க, உதவி செய்ய மனை, காணி வாங்குவதை ஒத்தி வைக்கவும் தெய்வாதீனமாக வியாழ பகவான் 7 ம் நிலையில் இருப்பதினால் நன்மைப்பலன்கள் தீமையின் பின்னர் நிச்சயம் ஏற்படும். 25 - 5 - 98 க்கு முன் வசதி வாய்ப்பு இருப்போர் வெளியூர் செல்லும் பொன்னான சந்தர்ப்பத்தைக் கைவிடவே வேண்டாம் சிலர் தாரத்தைப் பிரிய அல்லது இழக்க நேரிடலாம். இராகு - கேது முறையே ஜென்மம் மற்றும ஏழில் உள்ளதால் நோயினால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். சத்திரசிகிச்சை ஏற்படலாம்: திருடர் தொல்லையுண்டாம்

### கன்னி

(உத்தரம் 2,3.4-அத்தம், சித்திரை 1, 2)

உங்களுக்கு 7ம் இடத்தில் சஞ்சரிக்கும் சனீஸ்வரனால் தம்பதியினருக்கு உடனலக்கேட்டினைத் தோற்றுவிக்கும் 18-4-98ல் ஆரம்பிக்கும் அட்டமத்துச்சனி 6-6-2000ம் ஆண்டு வரை இருப்பதினால் முன் கூட்டியே விடயதானங்களில் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள் வியாழபகவான 6ஆம இடத்தில் உலா வருவதினால் சிலருக்கு நிசசயம் எதிரிகளினால் தொல்லைகளும் ஆபத்தும் ஏற்படலாம் சுமுகமாக இருந்த மாமன்மாரின் உறவு கெட்டு உங்களைக் கை விட்டு வீடும நிலை ஏற்படலாம். நரம்புடன் தொடர்பான நோய்கள் தோன்றலாம. புதிய முயற்சிகள் ஆரம்பத்தில் தோல்வியையும், தடங்கல்களையும ஏற்படுத்தும. இராகு - கேது முறையே கன்னிக்கு 12, 6ம் நிலைகளில் இருந்து கொண்டு அவமானம், செலவு, நோய் மற்றும் தீயபலாபலன்களைக் கொண்டு வந்தாலும் கடும் பாதிப்புக்கள் நிச்சயம் ஏற்படாது.

### துலாம்

(சித்திரை 3.4 சுவாதி, விசாகம் 1,2,3)

உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் மகா தெசாபுத்தி உங்களுக்கு இருப்பின் மருத்துவ சிகிச்சையினால் அவை குணமடையும் கிரக கோசரம் உங்களுக்குண்டு. சனீஸ்வரன் தற்போது 6-ம் இடத்திலும், வியாழன் 5 இலும்; இராகு கேது முறையே 11ம் 5-ம் நிலையிலும் இருப்பது உங்கள் முயற்சிகள்; எடுக்கின்ற காரியங்கள் யாவும் வெற்றியை ஈட்டித்தரலாம். பயண முயற்சிகள் கை கூடும். இழுபட்ட திருமணப் பேச்சு நன்மையில் முடியும். புத்திர பாக்கியம் கிட்டவும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் இடம் பெறவும் வெளிநாடுகளில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் கிட்டவும்; பிரிந்தவர் மீண்டும் ஒன்று சேரவும்; கால்நடைகள் மற்றும் விவசாய முயற்சிகளினால் இலாபம் கிடைக்கவும்; பிதா மற்றும் முத்தோர் உதவி பொறுத்த கட்டத்தில் ஏற்படவும் பலாபலன்கள் உண்டு.

### விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

ஐந்தில் சனி நெஞ்சில் சனி சனிகொடுக்கும் வேதனையாக இடர்ப்படுகின்ற உங்கள் இராசியில் சனீஸ்வரன் 5ம் இடத்திலும்; வியாழபகவான் 4ம் நிலையிலும், இராகு - கேது முறையே 10ம் 4 ம் ஸ்தானத்திலும் இருந்து கொண்டு இவற்றின் கோசர நிலையில் உண்மையிலேயே கெட்ட பலா பலன்களையே நீங்கள் அனுபவிக்க வேண்டிய சோதிடவிதி இருப்பினும்; உங்கள ஜாதகத்தில் மகாதெசா புத்தி ஆரோக்கியமாக இருப்பின நீங்கள் வார பலனைக்கண்டு பயப்படவே தேவையில்லை, எச்சரிக்கையாக, சிந்தனைக்கும் அறிவுக்கும் இடங்கொடுத்து நடப்பின் - நிச்சயம் கெட்ட பலன்களினின்று ம் தப்பிப் பிழைத்து விடுவீர்கள், சிலர் இதுவரை அனுபவித்து வருகின்ற வசந்தத்தை தற்காலிகமாக இழந்து அலைய வேண்டி நேரிடலாம், தாயாரின் நோயில் கவனமெடுக்காவிடின் பின்னர் வருந்த வேண்டி நேரிடலாம் 18-4-98 வரை புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை ஒத்திவைக்கவும், செய்யுந்தொழிலில் பிரச்சினைகள் உருவாகலாம்.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடம் 1)

''எதையுந் தாங்கும் இதயமே உங்கள் வெற்றிப்பாதையின் திறவு கோலாகும். தற்போது சனீஸ்வரன் கோசரரீதியில் 4 ஆம நிலையில் நின்று — வாழ்க்கை வசதிகளை முழு மனதுடன், சந்தோசகரமாக அனுபவிக்க முடியாது இடைக்கிடையே இடையூறுகள், தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். செவ்வாய்க்கிரகத்தின் கோசரத்தினால் ஒரு இரவிலேயே வாழ்க்கைப் பாதை மாறி விடலாம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

---

### ஏமாந்த

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்த நரி தனக்கு ஏற்படப் போகும் ஆபத்தை மறந்து மெல்ல மெல்ல கிட்ட வந்தது. முதலை செத்துதான் கிடக்கிறது. அதன் இறைச்சியை ருசி பார்த்து விடுவோம் என நினைத்து முதலைக்கு பக்கத்தில் வருவதற்கு காலடி எடுத்து வைத்தது. இருப்பினும் குள்ளநரிக்கு, முதலையை தான் ஏமாற்றிய பழைய ஞாபகம் எச்சரிக்கையாக அதன் மண்டையில் உறைத்தது,

நரி தனது குள்ளப்புத்தியை பாவித்து - முதலைக்கு கேட்கும்படி பினவருமாறு சொன்னது;

'செத்த முதலை என்றால் வாலையெல்ல ஆட்டும்' நரி சொல்வது போல் அப்படியும் இருக்குமோ என்று நினைத்த முதலை,

வாலை அங்கும் இங்கும் ஆட்டியது,

இதை அவதானித்த பின்னும் நரி முதலைக்கு பக்கத்தல் போவதற்கு என்ன பைத்தியமா?

தப்பினேன் பிழைத்தேன் என்று சொல்லி நரி ஓட்டம் பிடித்தது. இம் முறையும் முதலை ஏமாந்தது தான் மிச்சம்.

---

### தொழிலைச்

(5 ஆம பக்கத் தொடர்ச்சி)

☐ அவ்வாறாயின் நவாலி தேவாலயப்படு கொலை, பாசையூர் அந்தோனியார் தேவாலயப் படுகொலை துர்காபுரம் மீதான அரசின் தாக்குதல் களுக்கு நீங்கள் கண்டன அறிக்கை விட்டீர்களா?

(சிறிது மௌனத்தின் பின்) நான் கண்டன அறிக்கை விடவில்லை. நான் அதில் தவறிழைத்து விட்டேன் என்று தான் கூற வேண்டும்.

☐ யாழ் குடாநாட்டில் முஸ்லிம் மக்கள் மீள் குடியேற்றம் பற்றி—

முஸ்லிம் மக்கள் இல்லாத தமிழ் சமுகத்தை கற்பனை பண்ணிப் பார்க்க முடியாது தமிழ் மக்களின் தொகுதியில் முஸ்லிம்கள் தவிர்க்க முடியாத ஒரு அங்கம் அவர்கள் வெளியேற்றப்பட்டவை துரதிட்டமான ஒரு நிகழ்வு எனவே அம் மக்கள் மீண்டும் இங்கு வந்து குடியமர்ந்து வாழும் போது தான் முற்றாக இயல்பு நிலை திரும்பி விட்டது எனக் கருத முடியும்.

☐ 'காலைக்கதிர்' ஊடாக தமிழ் மக்களுக்கு கூறும் செய்தி என்ன?

நீங்கள் யாவரும் நம்பிக்கையுடன் இருங்கள் நம்பிக்கையை தளர விடாதீர்கள் நிவாரண உதவிகளிடமிருந்து விடுபட்டு கூட்டான முயற்சியை எடுங்கள் புத்திஜீவிகள் - சிறப்பாக பல்கலைக்கழகம் - அபிவிருத்திக்கு உதவ முன் வர வேண்டும் ☐

# காலைக்கதிர்

தபாற்பெட்டி எண் : 145, யாழ்ப்பாணம்.

ஒளி : 01 03-04-1998 கதிர் : 05


## எல்லோருக்குமுள்ள கடமை

இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் தமது இன அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும், சுயகௌரவத்துடனான வாழ்வை உத்தரவாதப்படுத்திக்கொள்ளவும் தான் போராடிக் கொண்டு வருகின்ற என்பது வெட்ட வெளிச்சமானது.

இருந்த போதிலும் ஒட்டு மொத்தமான இன நலன் என்ற அடிப்படையில மேற் கொள்ளப்படும் ஒரு செயற்பாடு காலவோட்டத்தில் நீர்த்துப் போனதும் - அதில் ஈடுபட்டவர்கள் மட்டும் பாதிக்கப்பட்டு நிர்க்கதியானதும் தமிழ் மக்களின் வரலாற்றில் பல பக்கங்களில் பதியப்பட்டுள்ளது - குறிப்பிடத்தக்கது. ''தனிச் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி'' என்று சட்டம் கொண்டு வரப்பட்டபோது உணர்ச்சி வேகத்துடன் அரசாங்க உத்தியோகத்தை உதறிவிட்டு வந்தவர்களின் 'தியாகம்' கௌரவிக்கப்படுவதற்கு பதிலாக ''வாழத் தெரியாதவர்கள்'' என்ற பெயர் தான் அவர்களுக்கு காலப்போக்கில் எஞ்சியது என்பதை இங்கு ஒரு உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். அதே போல 1983-ல் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் கொண்டு வந்து தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கைக்கு தடை போடப்பட்ட போதும் அதற்கு ஆதரவாக சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்தவர்களும், எதிர்ப்புணர்வை வெளிக்காட்டியவர்களும் இன்று வரை பாதிக்கப்பட்டவர்கள் பட்டியலில்தான் உள்ளார்கள்.

ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகளின் போது உணர்வலைகளைத் தட்டி எழுப்பியவர்கள் இன்ன அமுலில இருக்கும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக சத்தியப்பிரமாணம செய்து கொண்டு வெற்று வீராப்பு பேசி தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிடவில்லை என்று கூறுவது சற்றும் பொருத்தமானதாகத் தென்படவில்லை.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை நாடிய அரசியல் கட்சிகள் எங்களுக்கு ஆதரவாக வோட்டுப் போடுங்கள் மிகுதியை நாம் பார்த்துக்கொள்கிறோம் என்ற தொனியுடனேயே வாக்கு வேட்டையாடினார்கள 'போர் என்றால போர்' என்று சிறிலங்காப் பாராளுமன்றத்தில் ஜே.ஆர். கர்ச்சித்தபோது வெறுமனே கைகளைப் பிசைந்து கொள்வது மட்டுமே இந்தத் தலைவர்களுக்கு செய்யக் கூடிய செயலாக இருந்தது. நேர்மையான அர்ப் ணிப்புடன் செயலாற்றிய இளைஞர்களின் தியாகம தான் சிறிலங்கா அரசை திம்பு பேச்சு வார்த்தை மேசைக்கு இழுத்து வர வைத்தது என்பது வரலாறு எனினும் இன உரிமைக்கான போராட்டத்தில மக்களின் பங்களிப்பை சமாந்தரமாக வளர்த்துச் செல்லாமல் வேட்டுக்களில் மட்டும நம்பிக்கை வைத்ததும வீணாகிப் போய் விட்டதே என்பது தான் இன்று சாதாரண பொதுமக்களின் கவலையாக உள்ளது எனலாம். யார் மீது தவறு எங்கே தவறுவிடப்பட்டது? என்ற கேள்விகளுக்கு அப்பால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும - என்பதும், இயல்பான - அமைதியான வாழ்க்கைக்கு விரைவில திரும்பி விட வேண்டும என்பதும பொது மக்களின் நியாயமான எதிர்பார்ப்பாக உள்ளது. எனினும இந்த இலக்கை எட்டுவதில எல்லோருக்கும் பங்குண்டு என்பதை உணர்ந்து கொண்டு உண்மையான நிலைமைகளை உண்மையாக உணர்த்தி எல்லோரையும் செயற்படத் தூண்டுவதே தலைமைப் பொறுப்பேற்று வழிகாட்ட முனைபவர்களின் கடமையாக இருக்கும் எனலாம்.

# மத்தியில் வாஜ்பாய் அரசுக்கு நித்தியகண்டம் பூரண ஆயுசு...?

பல கட்சிகள் சேர்ந்த கூட்டணி அரசுக்கு தலைமை தாங்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில்வெற்றிபெற்றிருக்கிறார். அவருக்கு ஆதரவான 274 வாக்குகளும் எதிராக 261 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. அதிகப்படியாக 13 வாக்குகள் வித்தியாசத்தில் தப்பிப்பிழைத்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

ஏனென்றால் சபாநாயகர், குரல் வாக்கெடுப்புக்கு கேட்ட போது அதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளாது வாக்கெடுப்பு நடத்தியே ஆகவேண்டும் என்ற நிலையில் அடம் பிடித்ததால் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. எப்படியும் இந்த ஆட்சியை தொடர விடக்கூடாது என்பதில் எதிர் கட்சிகள் காட்டிய எதிர்ப்பு இந்த வாக்கெடுப்பில் தெரிந்தது. நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற நிலையில் இந்த அரசு தொடரும் என்றே நம்பப்படுகிறது.

சபாநாயகர் தெரிவில் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் எடுத்த முடிவு ஒரு கல்லில் இரு மாங்கனிகளை பறித்ததிற்கு சமனாகும். ஏனென்றால்; ஆந்திர முதல்வர் - சந்திரபாபு நாயுடுவை ஐக்கிய முன்னணியில் இருந்து பிரித்தெடுத்து தங்கள் பக்கம் வளைத்துப்போட்டது. மற்றது, அவர் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்பதற்காக அவரது கட்சியை சேர்ந்த ஒருவருக்கு சபாநாயகர் என்ற முக்கிய பதவியை கொடுத்தது, இந்த மாஸ்டர் பிளானை வகுத்தவர்கள் ஐக்கிய முன்னணிக்கு பெரிய நெருக்கடியையே கொடுத்திருக்கிறார்கள. சந்திரபாபு நாயுடு ஐக்கிய முன்னணியின வழிகாட்டு குழு தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

வாஜ்பாய் அவர்கள் நம்பிக்கை தீர்மானத்தில் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டாலும் அவர் எதிர் நோக்கும் அரசியல் நெருக்கடிகள் மலை போல் அவர் முன் நிற்கின்றன குறிப்பாக, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் காஷ்மீர் - இலங்கைத்தமிழர் பிரச்சினைகளை குறிப்பிட்டுச் சொல்லலாம். கடந்த காலங்களில், இந்த இரண்டு பிரச்சினைகளாலும இந்தியாவின் அரசியல் ஸ்திரத்தன்மை சீர்குலைந்திருப்பது மறைக்கப்பட முடியாத சங்கதிகளாகும்.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் ஆதரவாளர் எனக்கருதப்படும் ஜோர்ஜ் பெர்ணாண்டஸை பாதுகாப்பு அமைச்சராக நியமித்தது ஆச்சரியமான — அதே நேரத்தில் அதிர்ச்சியூட்டும் செய்தியாக அவதானிக்கப்படுகிறது.

குறிப்பாக இலங்கை சிங்கள அரசியல் வாதிகளால் சீரணித்துக் கொள்ள முடியாத நிகழ்ச்சியாகவே இது கருதப்படுகின்றது.

முன்பு வெளிநாட்டமைச்சராகவும் - இன்று பிரதமராக இருக்கும் வாஜ்பாய் அவர்களின் இந்த முடிவு சிறுபிள்ளைத்தனமானது என்றும்கூற முடியாது.

இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியை கொடுப்பதற்காக இப்பதவி கொடுக்கப்பட்டதா! அல்லது பதவியை கொடுத்து புலிகளின் பால் அவருக்கிருக்கும் தொடர்பை அறுத்து விடுவதா! என்னும் இருவேறு விதமான கேள்விகள் எழத்தான் செய்கின்றன. பொதுவாக பதவியில் இருக்கும் போது அரசியல் வாதிகளின் பழைய பேச்சுகளும்-நடவடிக்கைகளும் அடக்கி வாசிக்கப்படுவது தான் இயல்பு' ஆனால் மிசா சட்டத்தை எதிர்த்து கடுமையாக போராடிய தீவிரவாதியான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் புலிகள் விடயத்தில் என்ன முடிவு எடுக்கப்போகிறார் என்பது போகப் போகத்தான் தெரியும். புலிகளுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பது இங்கு பரவலாக பேசப்படுகின்றது வை. கோபால்சாமி, ராமதாஸ். பால் தக்கரே போன்றோர் புலிகளுக்கு ஆதரவு அளிக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவார்கள் என்று இங்கு வெளிவரும் பத்திரிகைகளாலும் அலசப்படுகிறது, இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை மறைத்து பூசி மெழுகுவது தான் புலிகளுக்கு இந்திய அரசாங்கம ஆதரவு அளிக்க மாட்டாது என்பதற்கான நிலைப்பாட்டுக்குரிய காரணங்கள், பின்வருமாறு;

- இந்திய பாராளுமன்றத்தில் புலிகள இயக்கம் தடை செய்யப்பட்டிருக்கிறது
- ராஜீவ் காந்தியின் படுகொலையில் சம்பந்தப்பட்ட புலிகளும் - புலி ஆதரவாளர்களும் இந்திய நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனக் கண்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.
- புலிகளுடனான கடந்த கால உறவில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள்,
- காங்கிரஸ் கட்சி இன்று பாராளுமன்றத்தில் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக இருப்பதால், புலிகளை தூக்கிப்பிடித்து தேவையற்ற சிக்கலில் வாஜ்பாய் மாட்டிக் கொள்ள விரும்பமாட்டார்.
- ராஜீவ் காந்தியின் படுகொலை விருப்பு வெறுப்புக்கு அப்பால் எதிர் கட்சித் தலைவர்களாலும் - இந்திய மக்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்ச்சியாக இன்றும் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் இந்திய அரசாங்கம் புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் என நினைப்பது

ஜெயக்கொடி

மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகவே முடியும்.

இருப்பினும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை நியாயமானது - அது சமாதானமாக தீர்க்கப்பட்ட வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய் உறுதிபட கூறியிருக்கிறார். இலங்கைத் தமிழ் அகதிகள் ஒரு லட்சத்திற்கு மேல் தமிழ் நாட்டில் இருப்பதும் - தொடரும் யுத்தத்தால் அகதிகள் மேலும் வருவதும் - இலங்கை கடற்படையால் தமிழ் நாட்டு மீனவர்கள் அடிக்கடி சுட்டுக் கொல்லப்படுவதும் - இதைக் காரணம் காட்டி கச்சதீவை மீளப்பெற வேண்டும் என ஜெயலலிதா போர்கொடி உயர்த்துவதும் இலங்கைப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாக இருப்பதால் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கூடிய கவனம் செலுத்துவார் என்றே நம்பப்படுகின்றது.

இந்தியாவின் வடக்கே காஷ்மீர் தெற்கே இலங்கை. இரண்டும் இந்தியாவின் உறுதித்தன்மைக்கு சவால்விடும் எரியும் பிரச்சினைகள். அதை ராஜதந்திர வழியிலோ அல்லது இராணுவ பலத்தாலோ தீர்வு கண்டால் தான் பிரதமர் வாஜ்பாய் இந்தியாவின் இறையாண்மையை பாதுகாக்க முடியும். இந்திய மக்களின் விருப்பமும் இதுவாகக் தான் இருக்கும். வலுவான இந்தியாவாக இருந்தால் தான் வளமான இந்தியாவை உருவாக்க முடியும். □

# பெரியோர் வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர் தந்தைசெல்வா

கறுப்பின மக்களுக்காகப் போராடிய ஆபிரகாம் லிங்கன், மதச் சீர்திருத்த வாதி மார்ட்டின் லூதர் கிங், மற்றும் நெல்சன் மண்டேலா, யசீர் அரபாத் போன்றோரின் வரிசையில் வைத்து 'மதிக்கப் படத்தக்கவர் தந்தை செல்வா.

யாழ் மாநகர சபையின் முன் னாள் உறுப்பினர் ஜனாப் பசீர் இவ்வாறு குறிப்பிட் டார். கடந்த செவ்வாயன்று தந்தை செல்வா நினைவுத் தூபியருகில் இடம்பெற்ற நினைவு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ஜனாப் பசீர் மேலும் குறிப் பிடுகையில்,

யாழ்ப்பாண மண்ணிலி ருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் இந்த மண்ணிலி ருந்து உரையாற்ற சந்தர்ப் பம் வாய்த்து உள்ளது. தந்தை செல்வா முஸ்லிம் மக்களையும் தமது சகோத ரர் போல நேசித்தவர் அவர் ஒரு உன்னதமான தலைவர் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில், வடக்கு கிழக்கு மாகாண மெதடிஸ்த திருச்சபை தலைவர் வண பிதா கருணைராசா, யாழ் மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை யாழ் மாநகர பிரதி முதல்வர் நாவேந்தன், தமிழர் விடுதலைக் கூட் டணிப் பிரமுகர் மாவை. சேனாதிராசா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

---

## உங்கள்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியாழபகவானும் 3ல் நின்று தீதிலாதொரு முன்றிலே துரியோதனன் படை மாண்ட கதையாக - பெண் - மது - பண ஆசையினாலே சமுகத்திலே இதுவரை உங்களுக்கு இருந்து வந்துள்ள மதிப்பு திடீரென இறங்கி விடலாம். தெய்வா தீனமாக நீங்கள் செய்துள்ள புண்ணியம் போலும் இராகு - கேது முறையே 9, 3ம் நிலை யில் நின்று சோதனைகளை வெற்றிதரும் சாதனைகளாக மாற்றிவிடுவர். இயன்றவரை தானதர்மங்களைச் செய்து தீமைப் பலாபலன்களின்றும் தப்பும் வழியைத் தேடவும். சகோதரர் வழியில் சஞ்சல முண்டு. உடல் ஆரோக்கியத் தில் கவனஞ்செலுத்துக

## மகரம்

(உத்தராடம், 2,3,4. திரு வோணம், அவிட்டம் 1,2)

உண்மையும் நேர்மையும் கைக்கொள்வது உங்களை உயர்த்தும் ஏணிப்படிகளாகும் கோசர ரீதியில் சனீஸ்வரன் இவ்வாரத்தில் 3-ல் நின்று தைரி யம் வீரியத்தைக் கொடுத்து சகோதர உதவியினால் முன் னுக்கு வரத்தெண்டிப்பீர்கள் நோய்கள் குணமடைந்து உடல் பழையபடி தேறிவிடும் சகோ தரிகளுக்கு திருமணம் முத லான சுபமங்கள நிகழ்வுகள் முற்றுப் பெறும், 18 - 4 - 98ல் இதுவரை 3-ல் நிற்கும் சனீஸ் வரன் 4 ஆம் இடத்திற்குவந்து சில பல அசௌகரியங்களை ஏற்படுத்தும். வியாழபகவான் 2ல் நிற்பதினால் உங்கள் சொல்லுக்கு மதிப்பு ஏற்படும். திடீர் அதிர்ஷ்டசாலியாகலாம் உத்தியோகம் கிட்டவும்: தொழில் வாய்ப்புக்கள் பெற வும் சந்தர்ப்பம் உண்டு. குழந் தையின்றி வருந்துவோர்க்கு புத்திரபாக்கியங்கிட்டும். புதிய முயற்சிகளை 25 - 5 - 98 க்கு முன் ஆரம்பிக்கவும், சனீஸ்வர விரதம் மற்றும் வியாழனுக்கு தெட்சணா மூர்த்தி அர்ச்சனை செய்து வரின் கஷ்டங்கள் குறைவடையும்.

## கும்பம்

(அவிட்டம 3, 4, சதயம், பூரட்டாதி 1,2,3)

பொறுமையும், சகிப்புத்தன் மையுமே உங்களை இந்த வாரம் வெற்றி வீரராக்கும். குருபக வான் ஜென்மத்தில் இருந்தா லும் கும்பத்திற்கு நட்பாக இருப் பதினால் சோக நிகழ்ச்சிகள் குறைவு. இருந்த போதிலும் பிள்ளைகளுக்கு புத்திமதிகள் கூறி, வையுங்கள் சனீஸ் வரன் 2ம் இடத்தில் நிற்பதி னால் அடிக்கடி குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள் ஏற்படினும் குடும்பப்பிரிவு தோன்றுவது அபூர்வம். திருக்கணிதப்படி கும்பராசிக்கு 18 - 4 - 98-ல் ஏழரைச்சனி முற்றாக நீங்குவ தினால் எதிர் காலத்தில் பூவுல கின் இளவரசர்களாக விளங் கப் போகிறீர்கள். இராகு - கேது முறையே 7ம் 1ம் இடங்களில் நின்று கணவன் - மனைவி பிள்ளைகள் என்ற குறுகிய வட்டத்துக்குள் தென் றலும் புயலும் மாறி மாறி வீசச் செய்யும், பயணம், வாகனம், தொழில், நோய், விவாகப் பேச்சு, நண்பர் உறவு, உத்தியோகம்; அதிகாரி கள் தொடர்பு, முதலாளி, தொழிலாளர் நட்பில் விரிசல்- சந்தேகம், கேடு, பாதிப்பு, கழுத்தறுப்பு, காட்டிக் கொடுப்பு, பெட்டீசம் எழுதல் என்பவற்றை எதிர்பார்க்க லாம்.

## மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட் டாதி, ரேவதி)

ஏழரைச் சனி கடைக்கூறு உங்கள் இராசிக்கு 18 - 4- 98ல் ஆரம்பமாகி 6 - 6 - 2000 ஆண்டு வரை நடை பெறும். குருபகவான் தற் போது 12ம் இடத்திலும்; இராகு - கேது முறையே 6, 12ம் நிலைகளிலும் காணப் பட பலாபலன்களும் நன்மை யுந் தீமையும் விரவிக் கலந்தே நடை பெறுவதைக் காண்பீர் கள். தெய்வாதீனமாக - மீன ராசியில் சனீஸ்வரன், இராகு- கேது என்பன நட்பாகக் காணப்பட குரு ஆட்சி பெற்று இருப்பதினாலும், வருகின்ற துயர துன்பங்கள் புயலாக ஆரம்பித்து தென்றலாக இறு தியில் மாறி விடும். புதிய முயற்சிகளை ஆரம்பிக்க அரு மையான காலம். பட்ட கடன் அடைப்பீர்கள்; வாகன யோக முண்டு. சத்துருக்கள் தொல்லை நீங்கும். வழக்கு முதலான தீர்ப்புகள் சாதகமாக முடிவடையும். இழுபட்ட விட யங்கள் சாதகமான பதிலைக் கொடுக்கும். முட்படுக்கை ரோஜாப்பூ தூவிய மஞ்சமாக மாறி விடும். சமூக மட்டத்தில் ஏற்படும்வாதம்விதண்டா வாதம் செய்ய வேண்டாம். முழி வியளங்களில நம் பிக்கை வைக்கவும்.

## ஏமாற்று பேர்வழிகள் அதிகரிப்பாம்

யாழ். செயலகத்திற்கு வரும் அப்பாவிப் பொது மக் களை ஏமாற்றி அவர்களிடம் சுளையாகப் பணம் பறிக்கும் நடவடிக்கையில் சமூக விரோத சக்திகள் சிலர் ஈடு பட்டு வருவதாக அறியப்படு கிறது.

பிறப்பு அத்தாட்சிப் பத் திரம் எடுக்க வருவோர், வாகனப் பதிவுகள் மற்றும் வாகன வரி செலுத்துதல் போன்றவற்றுக்காக யாழ். செயலகத்திற்கு வருவோரி டம் இவ்வாறு 50 ரூபா முதல் 300 ரூபா வரையில் பணம் அறவிடப்பட்டு வருகிறதாம்.

---

## பேசுக்களுக்கான

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குரிமை என்பன போன்ற விடயங்கள் ஆயுதப் போராட் டத்தின் பெறுபேறாக வாய்த் தவையே என்பதை மூத்த அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்வது நன்மை பயக்கக் கூடியதாகும்.

எனவே 'தமிழீழ இலட்சி யத்தைக் கைவிட்ட துரோகி கள்' என்ற முத்திரை இப் போதும் செல்லுபடியாகக் கூடியதொன்றாக கருதக்கூடி யதல்ல. தமிழ் மக்கள் மத்தி யிலுள்ள அரசியல் சக்திகள் அனைத்தையும் அரவணைத் துச்செல்லக்கூடிய பரந்த நோக்கும், எதிர்காலம் குறித்த தூரப்பார்வையும், அர்ப்பணிப்புடன் கூடிய செயற் திறனும், வழிகாட்டும் பொறுப்பை ஏற்க முன்வருப வர்களுக்கு அவசிய அவசரத் தேவை எனலாம்.

இதற்கு அரசியல் அபிப்பி ராய முரண்பாடுகளைப் பகைமை உணர்வுகளாகப் பார்க்கும் போக்கு முற்றாக கைவிடப்பட்டு - சந்தேகப் பார்வைகள் நீக்கப்பட்டாக வேண்டும். அத்தகையதொரு நிலைமை எட்டப்படும் போது தான் பேச்சுவார்த்தை மேசை யின் மூலம் மக்கள் எதிர் பார்க்கும் அமைதி கிட்டும் என்று நம்பலாம், இல்லாத விடத்து பேச்சு வார்த்தைகள் காலங்கடத்தும் முயற்சிகள் என்ற கருத்துருவாக்கமே பொதுமக்கள் மத்தியில் மேலோங்கும்.

பன்முகப்படுத்தப்பட்ட

# நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்

மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியைப்பயன் படுத்தி செய்யப்படும் வேலைத் திட்டங்களில் ஒழுங்கு முறை எதுவும் பின்பற்றப்படுவதில்லை எனப்புகார் தெரிவிக்கப்படு கின்றது.

யாழ் மாவட்டத்திற்கெனப் பன்னிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள போதும் பெரும்பான்மையாகவுள்ள கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர்கள் முன்வைக்கும் வேலைத்திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படுகிற தாம். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் பற்றி விபரம் கூடத் தெரியப்படுத்தப்படுவ தில்லை எனவும் கூறப்படுகி றது.

---

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் விசாரிக்கப்பட்ட னர் இவர்களது உறவினர்கள் கைதானவர்களுக்காக உணவு தேநீர் எடுத்துச்சென்ற போது அங்கு நின்ற இராணுவத்தி னரால் அவர்கள் விரட்டப் பட்டனர்.

---

## துர்ப்பாக்கியமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தம் சுதந்திரத்தை பெற்றது போல் இலங்கை பெறவில்லை முற்றிலும் மாறு பட்ட வகையிலேயே இலங் கைக்கு சுதந்திரம் கிடைத்தது இந்தியத்தலைவர்கள் பலரின் தியாகத்தில் இந்தியா சுதந் திரம் பெற்றது. ஆனால் எம் தலைவர்கள் எந்த தியாகத் தையும் செய்யவில்லை, எனவே வெள்ளையர்கள் இலங்கையை விட்டு வெளியே றினாலும் கறுப்பு நிற வெள் ளையர்களால் இலங்கை ஆட்சி செய்யப்பட்டது. எம் தலைவர்கள் பிரித்தானிய பிரபுக்களின் நண்பர்களா கவே இருந்தனர்.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் எதிர் காலத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம் என்ற தூரநோக்கு அன்று தலைவர்களிடம் இருக்க வில்லை,

இன்று உலகில் 70 நாடுக ளில் இனப்பிரச்சினை உண்டு இலங்கை இனப்பிரச்சினை யால் இதுவரை 56,000 பேர் பலியாகியுள்ளனர். 162 பில்லியன் பெறுமதியான சொத்துகள் நாசமாகிவிட் டன. இன்று போர் செலவு 50 மில்லியன். இதை எம்மால் தாங்கமுடியாது. சமாதா னத்தை ஏற்படுத்த முறை யான அரசியல் திட்டம் வேண்டும். சுதந்திரப்பொன் விழாவை கொண்டாடினால் மட்டும் போதாது நாம் விட்ட பிழைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

---

## வெளியேறிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கை செய்யப்பட்டுள்ளது பல கால்நடைகள் அங்கு இன்னமும் உள்ளன. இவற்றை பராமரிக்கவும் அறுவடை மேற் கொள்ளவும் இப்பகுதி மக் களை மீளச் செல்ல வழி செய் யுமாறு சம்பந்தன் கோரி யபோதே அங்கு செல்ல அனு மதிக்க முடியாது என இரா ணுவ அதிகாரி குறிப்பிட்டார்.

இதே சமயம் கடந்த மாதம் 24 ஆம் திகதி மருதானை கபி தாவத்தை பாலசெல்வவிநா யகர் ஆலய பிரதம குரு சண்முகரட்ண சர்மாவும் அவ ரின் குடும்பத்தினரும் இரவு படையினரால் கைதாகினர். அதேபோல கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய ஆலய குருவும் கைதானார்.

கபிதாவத்தை பிரதமகுரு வின் மகள் திருமதி சுவாமி நாதன், பேரப்பிள்ளைகளான வித்தியா' பிரசனர், கிருபா கரி ஆகியோரே கைதானவர் களாவர்.

இதனிடையே கடந்த 31 ஆம் திகதி புகனன்று வவு னியா கொழும்பு வருவதற்காக வியாவில் ரயில் ஏறிய 300 தமிழர்கள் அவர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வந்திறங்கிய துமே கைதானர்.

கொழும்பில் கைதுகள் இவ் வாறு தொடர்வதையிட்டு அர சியல் கட்சிகளும் மற்றும் இந்துமாமன்றம் போன்ற அமைப்புக்களும் அரசின் உயர் மட்ட கவனத்திற்கு கொண்டு வந்து எதிர்ப்புக்குரல் எழுப்பி யுள்ளனர். இதையடுத்து இது குறித்து ஆராய கொழும்பு மாவட்ட பாதுகாப்பு உயரதி காரிகள் மாநாடு ஒன்றை சட் டமா அதிபர் சரத் என் சில்வா நேற்று வியாழக்கிழமை மாலை கூட்டுவதற்கான ஏற் பாடுகளை செய்தனர், அவரின் அலுவலகத்திலேயே இம்மா நாடு நடைபெற ஏற்பாடாகி யுள்ளது.

இம்மாநாட்டில் கொழும்பு மாவட்ட பிரதிபொலிஸ் மாஅதி பர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் இரா ணுவ விமானப்படைகளின் அதிகாரிகள் கலந்து கொள் ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் கொழும்பில்தமி ழர்கள் காரணமின்றி கைது செய்யப்படுவது தேடுதலின் போது அயலவர்கள் முன்னால் தமிழர் படையினரால் அவமா னப்படுத்தப்படுவது, மற்றும் கைதானவர்கள் பொலிஸ் நிலையங்களில் உடல் மற்றும் உளரீதியான இம்சைக்கு உள் ளாக்கப்படுவது போன்ற விட யங்களை கையாள்வது குறித்து ஆராயப்படும் எனக் கூறப்படுகிறது.

---

இப் பத்திரிகை காலைக்கதிர் நிறுவனத்தின் சார்பாக பா. அன்பழகன் அவர்களால் 1998 ஏப்ரல் 03 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டது.
அச்சுப்பதிவு: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.